For private circulation only

Book Post

https://christianhistoricalsociety.in/

# கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்

• நவம்பர் 2024

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

• விலை : ரூ 60 • இதழ் 54




www.christianhistoricalsociety.in

# பதிப்பாசிரியரிடமிருந்து..

கிறிஸ்துவுக்குள் அன்பான வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கு,

ஆண்டவரும், மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கத்தின் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

'பூர்வ நாட்களில் நீர் நடத்தி வந்த கிரியைகளை எங்கள் பிதாக்கள் சொல்லக் கேட்டோம்'.(சங்.44:1)

'ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிடில் அது எனக்கு எப்படித் தெரியும்' (அப். 8:31)

கடந்த 56 ஆண்டுகளாக ஆம்பூர் பகுதிகளில் ஏழை, எளியவர்களுக்கும், திக்கற்றவர்களுக்கும் இயன்றதை செய்த மருத்துவர் மறைந்த ஆலிஸ் அம்மையார் அவர்களுக்கு இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதத்தில் பல்வேறு வரலாற்றுச்சிறப்பு மிகுந்த கட்டுரைகளை இவ்விதழில் கொண்டு வந்துள்ளோம். குறிப்பாக இந்திய பெண்களுக்காகவும் குழந்தைகளுக்காகவும் மேலைநாட்டுக் பெண்களைக் கொண்டு ஜெனானா மிஷனரி இயக்கம் செய்த மகத்தான பணிகளை தொடராகவும், ஆபிரகாம் 'பண்டித'ரான வரலாறு, அனி ஜேன் ஆஸ்க்வித் அம்மையார் நூற்றாண்டு நிகழ்வு, ரேனியஸ் பிறந்தநாள் சிறப்பு கையெழுத்து அட்டை படம் நூல் வெளியீடு, திருச்சபை சரித்திரங்கள் என்று மிக சிறப்பாக வெளிவந்துள்ளது.

இவ்விதழளை வாசிக்கும் நேயர்கள், மிஷனெரிகள் மற்றும் ஊழியர்களின் தியாகங்களை மற்றவர்களோடு கூட பகிர்ந்துக் கொண்டு, மிஷனெரிகள் ஏற்றிய அந்த தியாக தீபத்தை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கட்டாய பணியாகும். எனவே வாசகர்கள் மற்றவர்களுக்கு இதழை அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். ஒவ்வொரு மாதமும் இவ்விதழை வெளியிடுவதற்கு மிகுந்த பொருட்செலவுகள் உண்டு, புதுப்பிக்காதவர்கள் மாத சந்தாவை புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் நினைவுபடுத்துகிறேன். முடியுமானால் காணிக்கையாகவோ அல்லது நன்கொடையாகவோ கொடுத்து தாங்க அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்க நூலக மற்றும் அருங்காட்சியகம் கட்டுமானப் பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து தாங்கவும் ஜெபிக்கவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பராபரனின் பணியில்

*Manna Selvakmuar*

9176780001


சுஜித் ரெக்ஸ்
வடிவமைப்பு

மன்னா செல்வகுமார்
ஆசிரியர்


கிறிஸ்தவ

# வரலாற்றுச் சுவடுகள்

மாத ஆய்விதழ் சந்தா விபரம்

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

வங்கி விபரம்

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்" மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள G-Pay மூலம் நன்கொடை செலுத்த 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும் காசோலை மற்றும் வரைவோலை செலுத்த "கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்" ( CHRISTAVA VARALATRU SUVADUGAL ) என்ற பெயரில் எடுக்கவும்


ஆசிரியர்

கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,
கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,
பங்களாச் சுரண்டை-627859,
தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)
04633 290401, 91767 80001

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com


இது ஒரு வரலாற்றுச் சங்க உறுப்பினர்களுக்கான பதிப்பு, சந்தா விபரங்கள் இதழின் உள்ளே,

9176780001 www.christianhistoricalsociety.in



# ஆலீஸ்

## ஒரு தேவதையின் காலம்...

பேராசிரியர். சாரோன்
சென்னை

கடந்த (2024) செப்டம்பர் மாதம் ஆம்பூர் வாணியம்பாடியைச் சுற்றியுள்ள மக்களுக்கு அப்படி முடியும் என்று யாரும் நினைத்திருக்கவில்லை. அறுபது ஆண்டுகளாக வாரம் ஒரு நாள் தங்கள் ஊருக்கு அந்தக் கார் வரும், அதில் மிஸிமாவோடு மிசியம்மாவும் வருவார்கள். கொஞ்ச நாட்களாகதான் வருவதில்லை. தங்கள் நாட்டுக்குப் போயிருப்பார்கள், திரும்பி வந்ததும் வருவார்கள் என்று காத்திருந்தனர் ஏழை எளிய மக்களும் அந்தந்த ஊர்களின் தெருக்களில் சுற்றித் திரியும் உயிரினங்களும். செப்டம்பர் மாதம் 30-ம் நாள் அதிகாலையில் அந்தச் செய்திக் காட்டுத் தீயைப் போல் பரவியது. செய்தியைக் கேட்ட எல்லார் மனதிலும் தீயாய் பற்றி எரிந்தது. யாராலும் நம்ப முடியவில்லை. மாறி மாறி விசாரிக்கிறார்கள். பலர் ஆம்பூர் பெதஸ்தா மருத்துவமனையை நோக்கி ஓடி வருகிறார்கள்.

கடந்த பத்து ஆண்டுகளாக (2015 முதல்) குற்றுயிராக்கப்பட்டு கிடந்த பெதஸ்தா மருத்துவமனை வாரத்திற்கு ஒரு நாள் (செவ்வாய்) மிஸியம்மா ஆலீஸால் உயிர்ப் பெறும். போன செவ்வாய் கிழமைக்கூட ஈச்ச மரத்திற்கு நடுவிலிருந்து குயில் கூவிக் கிடக்க படுக்கையிலிருந்தபடியே மிசியம்மா குழந்தையில்லாத பலருக்கு மருத்துவம் பார்த்தார்கள், மாத்திரைகள் கொடுத்தார்கள், சாப்பிட வேண்டிய உணவுகளையும் தவிர்க்க வேண்டியவற்றையும் சொல்லி அனுப்பினார்கள்.

முதன்முதலில்மருத்துவம்பார்க்கவந்துமிசியம்மாவைப் பார்த்ததும் தயக்கமும் கூச்சமுமாக திக்கி தடுமாறியவர்களை தனது இயல்பான குறும்பு பேச்சினால் குலுங்கி சிரிக்க வைத்து விடுவார் மிசியம்மா ஆலீஸ். ஏற்கனவே மிசியம்மாவிடம் சிகிச்சை எடுத்து முதல் குழந்தையைப் பெற்றவர்கள் இரண்டாம் குழந்தைக்கும், இரண்டு குழந்தைகளைப் பெற்ற தம்பதிகள் மூன்றாவது ஆண் அல்லது பெண் குழந்தைகள் வேண்டி வந்து மாத்திரைகள் வாங்கிச் சென்றார்கள். அவர்களிடமெல்லாம் 'நல்ல செய்தியோடு அடுத்த மாதம் பார்க்கலாம்' என்று சொல்லி கைகள் கூப்பி அனுப்பிய நினைவுகளோடு ஓடி வந்தார்கள். பெதஸ்தா மருத்துவமனை தன் ஒளியை முழுவதுமாக இழந்து இருண்டிருந்தது.

**'ஐயோ அம்மா உனுமேல்பட்டு அவ்ளோ தானா?'**

**'யார தேடி இங்க வருவோம் எம்மா நாங்க'**

என்று அங்கு வைக்கப்பட்டிருந்த பேனரிலிருக்கும் மிசியம்மா ஆலீஸின் படத்தைப் பார்த்து கதறிக் கிடந்தார்கள் தகவலறிந்து வந்த ஏழை எளிய மக்கள். கையேந்துவோரும் மாற்றுத்திறனாளிகளும் ரயில்வே பாலத்தில் நுழைந்து கதறியபடி ஓடி வருகிறார்கள்.

'ஓ' எம்மா, எங்கிந்தோ வந்து எங்ளுக்கு தாயிக்கி தாயா சாமிக்கி, சாமியா இந்தியே இபோ எங்கள உட்டுட்டு போயிட்டியே இது நியாயமா எம்மா'

'உன்னுமேல் எங்களுக்கு யாரு எம்மா கெதி, ஓ எம்மா, இந்த உலகத்துல எங்கள பேர் சொல்லி மருவாதியா யாரு எம்மா கூப்பிடுவாங்க'

என்று கதறும் பெயர்கள் தெரியாத அந்த மக்களின் குரல் மிசியம்மா ஆலீசைத் தேடி அந்த வெளியெங்கும் காற்றில் அலைந்தன. இத்தனை நாட்களாக ஆதரவு யாருமற்ற இந்த அழுக்கான மக்களின் நம்பிக்கையான இளைப்பாறுதலாக உறவாக இருந்த ஒரே தேவதையும் இனி இல்லை என்றானதும்

முதன்முதலில் தங்களை ஆதரவற்றவர்களாக உணர்ந்தவர்கள் கதறி கிடந்தார்கள்.

மிசியம்மா, வெள்ளக்காரம்மா, ஆலீஸம்மா, வெள்ளக்கார டாக்டரம்மா என்றெல்லாம் கடந்த 57 ஆண்டுகளாக எல்லா மக்களாலும் அன்போடு அழைக்கப்பட்ட மிஸியம்மா ஆலீஸ் செப்டம்பர் 30-ம் தேதி வேலூர் சிஎம்சி மருத்துவமனையில் இறந்து போன செய்தி ஆம்பூருக்குள் இப்படி தான் பரவியது.

**'உன்ன பாக்க உன்னும் மூனு நாளு தான கீதுனு காத்துனுந்துமே எம்மா இப்படி பாக்கவா எம்மா'**

ஆம்பூரைச் சுற்றியுள்ள சுமார் ஏழுநூறுக்கும் அதிகாமான ஏழை எளிய மக்கள் ஒவ்வொரு மாதமும் முதல் வியாழக்கிழமை மிசியம்மாவைத் தேடி வருவார்கள். காலை பதினோரு மணிக்கு அவர்கள் ஒவ்வொருவரையும் அவர்களின் அப்பா பெயரோடு சேர்த்து அவர்களைப் பேர் சொல்லி கூப்பிடும் மிசியம்மா ஒவ்வொருவருக்கும் உதவி கொடுப்பார். அவர்களிடம் நலம் விசாரிப்பார். உடல் சுகவீனமாக இருப்பவர்களுக்கு மருந்து மாத்திரைகள் டானிக்குகள் என கொடுத்து கைகளைக் குலுக்கி அனுப்பி வைப்பார். மீண்டும் மறுமாதம் முதல் வியாழக்கிழமைக்காக அந்த மக்களைக் காண ஆலீஸ் காத்திருப்பார்.

இது ஆம்பூரில் சுமார் ஐம்பது ஆண்டுகளாக நடந்து வரும் காட்சி. மிசியம்மா ஆலீஸைப் பார்க்க அவரது உறவினர்களாக ஏழை எளிய மாற்றுத்திறனாளி மக்கள் வந்துப் போவார்கள். அவர்களின் எந்தக் கோலமும் அவர்களின் மீது வீசும் எந்த வாடைக்கும் ஆலீசின் முகம் சுளித்ததுமில்லை. கைகள் தயங்கியதுமில்லை.

மாதாமாதம் உதவி செய்யும் மிசியம்மா குளிர்கால மாதங்களானநவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் கம்பளி ஷொட்டர் போர்வை வேட்டி சேலைகள் குழந்தைகளுக்கு ஆடைகள் என எல்லாம் கொடுப்பார்கள் ஆலீஸ். அதெல்லாவற்றையும் விட அந்த மக்களுக்கு ஒவ்வொரு மாதமும் புன்னகையும் கிண்டலுமான தூய முகத்தினைப் பார்ப்பதும் அவரின் மிருதுவான கரங்களைப் பற்றி குலுக்குவதும் அவ்வளவு பேரானந்தம் தரும். இனி அந்த தொடுகை அவர்களுக்கு வாய்க்காது. இனி அவர்களை அவ்வளவு நேசிக்கும் ஒரு உயிர் இந்த பூமியில் இருக்காது என்ற வேதனையில் கதறினார்கள்.

இதுநாள் வரை இப்படி ஒட்டு மொத்த மக்களையும் நிலை குலைய வைத்த மரணம் எதுவும் அந்தப் பகுதியில் நடந்ததில்லை. செய்தியை கேட்ட காதுகளின் வாய்களெல்லாம் கடவுளை நோக்கி கூப்பிட்டன கடவுள் நம்பிக்கை கொண்டிருந்த நாக்குகளும் மிசியம்மா ஆலீசுக்காக உச்சரித்தன.

யார் இந்த மிசியம்மா ஆலீஸ்? ஆம்பூருக்கும் அவருக்கும் என்ன உறவு? எதற்காக எல்லா மக்களும் அவருக்காக கண்ணீர் வடிக்கிறார்கள்?

1968-ம் ஆண்டு தமது 29 வது வயதில் அமெரிக்காவிலிருந்து ஆம்பூருக்கு வந்த ஓர் இளம் பெண் மிஷனெரி. அங்கு 1921-ம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்த அமெரிக்கன் ஆஸ்பத்திரி என்று மக்களால் அழைப்படும் பெதஸ்தா மருத்துவமனைக்கு Community Health Service சேவைக்காக தன்னை ஒப்புவித்திருந்தார் ஆலீஸ். அங்கு ஜெர்மன் அமெரிக்கா தேசங்களைச் சேர்ந்த டாக்டர் புஷல், டாக்டர் புல்லே போன்றவர்களும் பராபர் ஆன்ரசன், மேரி மெக்னாப், குரூம்பக் ஹெட்விக், போன்ற இளம்பெண்கள் நர்ஸ், பிஸியோதெரபிஸ்ட், அனஸ்தீசியன், போன்றவர்களும் மருத்துவ மிஷனெரிகளாக இருந்தனர்.

அமெரிக்காவிலுள்ள Missionary Evangelical Lutheran India Mission (MELIM) மிஷன் 1894- ம் ஆண்டு முதல் 1985 -ம் ஆண்டு வரை நூற்றுக்கணக்கான மிஷனெரிகளை இந்தியாவுக்கு அனுப்பி உள்ளது. அதுவும் குறிப்பாக வறண்ட பகுதியான அன்றைய வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஆம்பூர், வாணியம்பாடி, பர்கூர், கிருஷ்ணகிரி, குடியாத்தம் பேரணாம்பட்டு போன்ற ஊர்களிலும் அதனைச் சுற்றிலுமுள்ள மலை கிராமங்களிலும் முதன்முதலில் பள்ளிக்கூடங்களைத் தொடங்கி ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களுடன் எல்லா மக்களுக்கும் கல்வி வழங்கியவர்கள் மிஷனெரிகளே. அதே போலதான் மருத்துவமும்.

இந்தப் பயணத்தில் முதலில் வந்த மிஷனெரி அருள்திரு தியோடர் நேத்தர் (1894 - 1904) இறுதியான மிஷனெரி டாக்டர் ஆலீஸ் ஜீ பிராயர் (1968 - 2024) அவர்கள்.

**லுத்தரன் மிஷின் முதல் மிஷனெரி:**

1894-ல் தரங்கம்பாடி துறைமுகத்திலிருந்து காலநடையாகவும் மாட்டு வண்டியிலுமாக பயணித்து கிருஷ்ணகிரிக்கு வந்த முதல் லுத்தரன் மிஷனெரி தியோடர் நேத்தர் அவர்கள். கால்நடையாகவே நடந்து சுற்றிலுமுள்ள கிராமங்களுக்கு சென்று மக்களுக்கு சேவை செய்வதின் மூலம் இயேசுவின் அன்பினை வெளிப்படுத்தினார். அப்போ வட தமிழகத்தில் கலாராவும் பிளேக்கும் தாண்டவமாடிய காலம். ஊரெல்லாம் மரண ஓலம் கேட்டுக்கொண்டிருந்த அந்த மிகக் கொடூரமான இருண்ட காலத்தில் பணி செய்கையில் காலராவுக்கும் பிளேக்கிற்கும் முதல் மிஷனெரி நேத்தரின் இரண்டு குழந்தைகள் சில வார கால இடைவெளிகளில் இறந்து போகிறார்கள். அவர்களை அவரே குழித் தோண்டி அடக்கம் செய்து விட்டு மக்களைக் காப்பாற்ற ஓடுகிறார். மறு ஆண்டு பிளேக்கிற்கு நேத்தரும் பலியாகிறார். அவரது இரண்டு குழந்தைகளுக்கு நடுவில் அவர் அடக்கம் செய்யப்பட்டார். இன்றைக்கும் கிருஷ்ணகிரியில் அவர்களின் கல்லறைகள் உள்ளது. இப்படிதான் மிஷனெரிகளின் தியாகம் இந்தியா முழுவதிலும் ஏன் உலகம் முழுவதிலுமே விதைக்கப்பட்டிருக்கின்றன.

தொடக்க காலத்தில் வந்த மிஷனெரிகளுக்கு தங்க வீடுகளில்லை. சாப்பிட உணவு இல்லை. மின்சாரமில்லாத காலம் அதனால் இரவில் வெளிச்சமில்லை. போக்குவரத்து வசதிகளில்லை. அறியாமை வறுமை ஏழ்மை இதை அப்படியே

சகித்து காலந்தள்ள மூடநம்பிக்கைகள் மட்டும் செழித்திருந்தன.

பள்ளிக்கூடங்களையும் மருத்துவமனைகளையும் தொடங்கி பட்டித்தொட்டிகளெங்கும் கல்வியையும் மருத்துவத்தையும் வழங்கி வந்துள்ளனர்.

1968 ல் ஆலீஸ் மிஷனெரியாக இந்தியா வருகையில்

1. வாணியம்பாடியில் அருள்திரு ஹார்ன்
2. கிருஷ்ணகிரியில் திரு. எங்கில்பார்ட்
3. பேரணாம்பட்டில் திரு. குரூம்
4. ஆம்பூரில் டாக்டர் புஷல், அருள்திரு. ஹோப்பர்

போன்றவர்கள் இருந்தார்கள். பெரும்பாலும் எல்லா மிஷனெரிகளும் குடும்பமாக தங்கி இருந்தார்கள். மக்கள் அவர்களை *'தொரை'* என்றும் அவர்களது மனைவிகளை தொரசாணியம்மா என்றும் அழைத்தார்கள். திருமணம் செய்துக்கொள்ளாமல் பணி செய்யும் இளம்பெண் மிஷனெரிகளுக்கென்று பெதஸ்தாவிற்கு அருகில் இருந்தது தான் லேடிஸ் பங்களா. அதில் ஏற்கெனவே நால்வர் தங்கியிருந்தனர். ஐந்தாவதாக புதிதாக வந்து சேர்ந்தார் ஆலீஸ் பிராயர்.

1968-ல் முதல் ஒரு வாரம் ஆலீஸ் மருத்துவமனையில் சுற்றித் திரிந்து மக்களை கவனித்தார். மக்கள் பெரும்பாலும் தமிழ் மொழியிலும் கணிசமான மக்கள் தெலுங்கு, உருது, கன்னடம் மொழிகளிலும் பேசிக்கொண்டனர். ஆனாலும் எல்லோருக்கும் பொதுவான மொழியாக தமிழ் மொழி இருந்ததை உணர்ந்தார் ஆலீஸ். தமிழ் மொழி தெரியாமல் மக்களிடம் உறவாட முடியாது என்று அறிந்து தெரிந்த ஆலீஸ் மதுரைச் சென்று மதுரை பல்கலைக்கழகத்தில் ஓராண்டுத் தமிழ்ப் பயின்றார். புலவர் சண்முகம் பிள்ளை என்பவர் பல நாடுகளிலிருந்து வந்து பல்வேறு இடங்களில் மிஷனெரிகளாக பணியாற்றி வரும் அயல்நாட்டவர்களுக்கு தமிழ் மொழியினை கற்பிக்கும் பொறுப்பினை ஏற்றிருந்தார். அவர்தான் ஆலீஸுக்கும் தமிழாசிரியர்.

ஓராண்டு தமிழ் கற்றுத் தேர்ந்த அவர் மதுரையிலிருந்து ஆம்பூர் திரும்பியதும் தனக்கு சொல்லப்பட்டது போல் 1969-ம் ஆண்டு முதல் ஜீப்பை ஓட்டிக்கொண்டு கிராமம் கிராமமாக மக்களைத் தேடிப் போக தொடங்கினார். அவரது ஜீப்பின் தலையில் INFENT CARE PROGRAME (ICP) என்று எழுதியிருக்கும். அவ்வாறு அவர் முதலில் போன ஊர் ஆம்பூர் - மாதனூருக்கு இடையிலுள்ள கீழ்முருங்கை எனும் கிராமம். ஒரே ஊரில் எதிரெதிர் தெருவில் பாகுபாடுகளிருந்தன. அது புரியாத ஒன்றாக இருந்ததால் ஆலீஸ் வீடு வீடாக போய் மக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.

பெதஸ்தா மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளின் விவரங்களை வாங்கிக்கொண்டு அவர்களது முகவரிகளைத் தேடி ஆம்பூரைச் சுற்றியுள்ள மலை கிராமங்களுக்குப் போய் அவர்களுக்கு தடுப்பூசிகளைப் போட்டார் ஆலீஸ். அம்மை நோய்கள், போலியோ, கக்குவான் இருமல், இரணல்ஜன்னி போன்ற நோய்களுக்கான தடுப்பூசிகளைக் காலவாரியாக குறித்து வைத்து தேடிப்போய் குழந்தைகளுக்கு தடுப்பூசிகள்போட்டார் சொட்டு மருந்துகள் விட்டார். ஒரு வெள்ளைக்கார இளம்பெண் ரெட்டை ஜடை போட்டுக்கொண்டு ஜீப் ஓட்டிக்கொண்டு தமிழில் பேசி உறவாடும் அதிசயத்தை மக்கள் முதன்முதாலாக ஒரு கனவைப் போல் பார்த்தார்கள்.

பெரும்பாலான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைப்பாட்டினால் மிகவும் பாதிப்பிற்கு உள்ளாகி இருப்பதை உணர்ந்து அந்தக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு பொது சுகாதாரம் ஊட்டச்சத்து தாய்ப்பாலின் முக்கியத்துவம் போன்றவற்றை சொல்லிக் கொடுத்தார். அப்போ மக்களிடையே காலகாலமாக இருந்துவந்த 'சூடு-ஈரம்' எனும் மூடநம்பிக்கையினைக் கேட்டு அதிர்ச்சியடைந்தார்.

மீன் முட்டை இறைச்சி கோதுமை உணவுகள் சாப்பிட்டால் உடலுக்கு சூடாகிவிடும் அதனால் குழந்தைப் பிறக்காமல் போய் விடும் என்பது முக்கியமாக இருந்தது. அந்தப் புரையோடிப்போன நம்பிக்கைகளிலிருந்து மீட்க ஆலீஸ் அவர்களுக்கு விழிப்புணர்வு ஊட்டினார். அப்படியான நேரங்களில்தான் ஆலீஸ் அந்த மக்களிடம் தனது வாழ்க்கை வரலாற்றைச் சொல்லுவார்.

**'நான் நாகர்கோவில்க்காரி எங்க ஊரில் மூனு வேளையும் மீன் சாப்பிடுவாங்க அங்க குழந்தைகள் பிறக்கலையா?'**

**'வட இந்தியாவில் மூனு வேளையும் கோதுமை சாப்பிடுகிறார்கள் அங்கு குழந்தைகள் பிறக்கவில்லையா?'**

**'சூடு ஈரம் என்று எதுவும் இல்லை. கீரைகள் சாப்பிடுங்கள், காய்கள் சாப்பிடுங்கள், மீன் இறைச்சி முட்டை சாப்பிடுங்கள்'**

மழலைக் குரலில் கொஞ்சி பேசும் ஆலீஸின் மொழியின் மயங்கி கிடந்தார்கள் மக்கள். வாராவாரம் இப்படி ஊர்களுக்கு மக்களைத் தேடி பயணித்தார் ஆலீஸ்.

ஆலீஸ் வெள்ளைக்கார மிசியம்மா என்றாலும் தன்னை நாகர்கோவில்காரி என்றுதான் சொல்லுவார். ஆம் ஆலீஸ் நாகர்கோவிலில் பிறந்த வெள்ளைக்கார மிஸிதான். ஆலீஸின் தந்தையார் பெயர் அருள்திரு. ரிச்சர்ட் ஹென்றி பிராயர், 1925-ஆம் ஆண்டு அமெரிகாவிலிருந்து லுத்தரன் மிஷனெரியாக கப்பலில் தூத்துக்குடி துறைமுகத்தில் வந்திறங்கியவர். நாகர்கோவிலைச் சுற்றியுள்ள பகுதியில் குறிப்பாக நாகர்கோவிலில் நெய்யூரைச் சுற்றியுள்ள பகுதியில் பணியாற்றுகிறார். தமிழும் மலையாளமும் கற்றுத் தேர்ந்து அந்த மக்களுடன் உறவாடுகிறார்.

மின்சாரம் இல்லாத இருண்ட காலம் அது. பனைமரங்கள் அடர்ந்த பகுதிகளில் அங்கங்கே பனையோலைகள் போர்த்திய குடிசைப் பகுதிகளில் தம் பணியினைச் செய்து வந்தார்.

ஆலீஸின் தாயாரின் பெயர் திருமதி எர்னா மிட்டில்டா. அமெரிக்காவில் செல்வந்தர் வீட்டுப் பெண். 1931-ம் ஆண்டு கப்பலில் உலகைச் சுற்றிப் பார்த்து வருகிறார். இந்தியாவைச் சுற்றி பார்த்துவிட்டு அப்படியே இலங்கைக்கு போக வந்தவர் தூத்துக்குடி துறைமுகத்தில் இறங்கி நாகர்கோவிலுக்கு

போகிறார் அங்கு எதிர்பாராத விதமாக மிஷனெரியான ரிச்சர்ட் ஹென்றியைச் சந்திக்கிறார். அவரின் அர்ப்பணிப்பினை உணர்ந்து தானும் அவருடன் சேர்ந்து மிஷனெரிப் பணியினைத் தொடர விரும்புகிறார். இருவருக்கும் 1931-ம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் நாள் அமெரிக்காவில் திருமணம் நடந்தது. இந்தியா திரும்பி நாகர்கோவிலில் தம் பணியினைத் தொடர்ந்தனர் அருள்திரு. ஆர் ஹெச் பிராயர் தம்பதியினர். அவர்களுக்கு 1932-ல் ஓர் ஆண் குழந்தைப் பிறந்தது ஈதன் ரிச்சர்ட் என்று பெயரிட்டனர். 1935-ல் இரட்டைக் குழந்தைகள் பிறந்தனர். அவர்களுக்கு ரோடா எலிசபெத் என்றும் ஏர்னா தியோடரா என்றும் பெயரிட்டனர். 1938-ம் ஆண்டு பிராயர் தம்பதியரின் நான்காவது குழந்தையாக பிறந்த கடக்குட்டி பிள்ளையாக பிறந்தவர் தான் ஆலீஸ்.

அப்போது தென்னிந்தியாவில் பணியாற்றும் எல்லா மிஷனெரிகளின் பிள்ளைகள் படிப்பதற்காக ஊட்டியில் ஹெபிரோன் சர்வதேச உண்டு உறைவிட பள்ளியும் கோடைக்கனலில் கோடை சர்வதேச பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளிருந்தன. ஆலீஸின் பெற்றோர் மூத்த மகனையும் தொடர்ந்து தம் இரட்டையரான மகள்களையும் கோடை சர்வதேச பள்ளியில் சேர்த்திருந்தனர். 1938-ல் பிறந்த கடைக்குட்டியான ஆலீஸ் தமது ஆறு வயது வரை நாகர்கோவிலில் பெற்றோருடன் மிகவும் செல்லமாக வளர்ந்தார். அவரது ஆறாவது வயதில் 1944-ம் ஆண்டு கோடை பள்ளியில் முதலாம் வகுப்பு சேர்க்கப்பட்டார்.

1948 ஆண்டு நான்காம் வகுப்பினை முடித்திருந்த நிலையில் ஆலீஸின் அண்ணன் தனது பள்ளி இறுதி வகுப்பினை முடித்தார். மேற்கொண்டு படிக்க இந்தியாவில் போதிய சூழல் இல்லாத நிலையில் தம் மகனின் உயர்க்கல்விக்காக ஆலீஸின் பெற்றோர் தமது நான்கு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு 1948-ம் ஆண்டு கப்பலில் தாய் நாடு திரும்பினார்கள்.

1948 ஆம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டு வரை ஆலீஸ் அமெரிக்காவில் தனது பள்ளி கல்லூரி கல்வியினை முடித்தார். அண்ணன் இசை ஆசிரியாராகவும் அக்காக்களில் ஒருவர் எக்ஸ்ரே டெக்னீஷியனாகவும் மற்றொருவர் ஆசிரியராகவும் பணியில் சேர்ந்திருந்தனர். அந்த நேரத்தில் ஆலீஸ் MASTER OF SCEINCE NURSING, Nursing Midwifery, Community Health Service போன்ற படிப்புகளை முடித்து ஒரு தனியார் மருத்துவமனையில் பணியில் சேர்ந்து அம்மருத்துவமனையின் சமுதாய மருத்துவராக அங்குள்ள ஊர்களில் பணி செய்தார். தனியாகவே இருபதுக்கும் அதிகமான பெண்களுக்கு பிரசவங்கள் பார்த்து சிறு அறுவை சிகிச்சை தையல் போடுதல் போன்ற வேலைகளைச் செய்து வந்தார்.

இந்த நாட்களில் தான் அவருக்கு தனது தந்தையைப் போல இந்தியாவுக்கு மிஷனெரியாக போக வேண்டுமென்ற எண்ணம் வந்தது. ஒவ்வொரு நாளும் அது குறித்த சிந்தனையிலிருக்கையில் டாக்டர் ஐடா ஸ்கடர் குறித்த நூல் ஒன்றினை வாசிக்க நேர்ந்தது. அந்த நூலை வாசித்த பிறகு அவரின் எண்ணம் இன்னும் ஆழமானது. இந்த நேரத்தில் ஆலீஸின் அண்ணனும் அவரது அக்காக்களும் தம் விருப்பம் போல் திருமணம் செய்து குடும்பமாக வாழ தொடங்கியிருந்தனர்.

அந்த நிலையில் ஆலீஸ் தனது பெற்றோரிடம் தானும் இந்தியாவுக்கு மிஷனெரியாக போக விரும்புவதாக தெரிவித்து விட்டு அதற்கான விண்ணப்பத்தினை Missionary Evangelical Lutheran India Mission (MELIM) க்கு தனது கல்வி மற்றும் சமூக மருத்துவப் பணியனுபவ விவரங்களோடு அனுப்பி வைக்கிறார்.

ஆலீசின் விண்ணப்பம் வந்த சில நாட்களில் இந்தியாவிலிருந்து M. E. L. I. M க்கு ஒரு கடிதம் வருகிறது. அதாவது ஆம்பூர் மருத்துவமனையில் தலைமை மருத்துவராக இருந்த டாக்டர் புஷல் எழுதியிருந்த அந்தக் கடிதத்தில்

'நமது பெதஸ்தா மருத்துவமனைக்கு நாளுக்கு நாள் நோயாளிகளின் வருகை மிகவும் அதிகரித்து வருகிறது. இங்கு பணியிலுள்ள மருத்துவர்கள் செவிலியர்களால் பெதஸ்தாவுக்கு வரும் மக்களை கவனிப்பதே மிகப் பெரிய சவாலாக உள்ளது. இந்த நிலையில் கிராமங்களிலிருந்து நடந்தே மருத்துவமனைக்கு வரும் ஏழை எளிய மக்களின் நிலை மிகவும் பரிதாபமானது. குறிப்பாக பிரசவமான தாய்மார்கள் அந்தப் பச்சிளம் குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு தடுப்பூசிக்கும் மருந்து மாத்திரைகளுக்கும் வரும் காட்சியைக் காண முடியவில்லை. சமூக மருத்துவம் முடித்த ஒருவர் இருந்தால் அந்த மக்களைத் தேடி போய் சந்திக்க உதவியாக இருக்கும். அங்குள்ள திருச்சபைகளில் அறிவித்து அப்படி உள்ள யாரையாவது அனுப்பி வைத்தால் நமது மருத்துவ ஊழியத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும்'.

ஆலீஸ் சமுதாய மருத்துவ மிஷனெரியாக போக விரும்புவதாக விண்ணப்பித்திருந்த அதே நேரத்தில் இப்படியான ஒரு கடிதம் இந்தியாவிலிருந்து வந்திருந்ததை கடவுளின் திட்டமாக எண்ணி மிஷன் கடவுளுக்கு நன்றி சொன்னது. ஆலீஸை அழைத்து பேசி எல்லா விவரங்களையும் தெரிவித்து விட்டு ஆயத்த பணிகளைத் தொடங்கினார்கள். அடுத்த மூன்றாம் மாதத்தில் அதாவது 1968- ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஆலீஸ் ஆம்பூர் வந்தடைந்தார்.

1968 தொடங்கிய ஆலீஸின் பயணம் 2018 வரை ஐம்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக வாரத்தில் ஒவ்வொரு நாளும் பத்து முதல் பதினைந்து கிராமங்கள் வரை சென்று வீடு வீடாக குழந்தைகளும் தாய்மார்களுக்கும் மருத்துவம் பார்த்தார்கள். ஏழ்மை வறுமையின் காரணமாக குழந்தைகள் மற்றும் தாய்மார்களிடையே பெரும் சிக்கலாக இருந்து வந்த ஊட்டச்சத்து குறைப்பாட்டினைக் கண்டறிந்த ஆலீஸ் அயிதரபாத்திற்கு சென்று ஒரு தனிப் படிப்பினை படித்து விட்டு வந்து சத்து மாவு தயாரித்து அதை குறைந்த விலைக்கு மக்களுக்கு கொடுக்க தொடங்கினார். 50 பைசாவிற்கு கொடுக்க தொடங்கிய அந்த சத்துமாவு, 50 பைசா, 75 பைசா 1 ரூபாய், 1. 25 பைசா, 1. 50 என்று வளர்ந்து கடைசியாக கடந்த மாதம் 50/- ரூபாய்க்கு கொடுக்கப்பட்டிருந்தது.

கோதுமை நிலக்கடலை கேழ்வரகு போன்றவற்றை வறுத்து அரைத்த அந்த மாவினில் சார்க்கரையும் பால் பவுடரும் கலந்து பொட்டலங்கள் கட்டி விற்கப்பட்டது. அந்த மாவினை வாங்கிச் சாப்பிடாதவர்கள் அந்தப் பகுதியில் மிகச் சிலரே இருப்பர். மிஸியம்மாவால் தயாரித்து வழங்கப்படும் அந்த மாவையும்

மக்கள் 'மிஸியம்மா' என்றே அழைத்தனர். 'மிஸியம்மா' 'மிஸிமா' 'மிஸிமாவு' என்று பலவாறு சொல்லுவார்கள். உடல் நலக்குறைவோடு இருப்பவர்கள் மருத்துவம் பார்த்துக் கொள்ள காத்திருப்பதைப் போல் மற்றவர்கள் மிஸியம்மா கொண்டு வரும் மிஸியம்மாவுக்காக காத்திருப்பார்கள்.

இப்படி மக்களை ஊர் ஊராக தேடி போகையில் குழந்தையில்லாமல் கவலையில் உழலும் நிறைய இளம் தம்பதிகளை ஒவ்வொரு ஊர்களிலும் பார்த்தார் மிஸியம்மா ஆலீஸ். அது அவர் மனதை மிகவும் பாதித்தது. வாரத்தில் ஒரு நாள் செவ்வாய் கிழமைகளில் தான் தங்கியிருக்கும் லேடிஸ் பங்களாவின் ஒரு பக்கத்தில் நாற்பது ஆண்டுகளுக்கும் முன்பாக குழந்தையின்மைக்கான மருத்துவசேவையினைத் தொடங்கினார். அதனை ஊர்களில் தேடி செய்யாமல் தாம் தங்கியிருக்கும் இடத்திலிருந்தே செய்தார். எந்த விளம்பரமோ பெயர் பலகையோ இல்லை. ஆலீஸ் தந்த மருந்து மாத்திரைகளின் பலனாய் குழந்தைப் பெற்றவர்கள் சொல்லி சொல்லி ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து மருத்துவம் பார்த்து குழந்தைகளைப் பெற்றனர். கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும் ஆந்திரா கர்நாடக, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும் மக்கள் ஆலீஸைத் தேடி வந்தார்கள். அப்படி ஒவ்வொரு வாரமும் சிகிச்சைப் பார்ப்பவர்களுக்கு மத்தியில் குழந்தை கிடைக்கப்பெற்றவர்கள் குழந்தைகளைக் கொண்டு வந்து ஆலீஸிடம் வாழ்த்துப் பெறும் காட்சிகளும் நடக்கும். ஆம்பூரைச் சுற்றியுள்ள ஊர்களில் ஆலீஸ் எனும் பெயரை நிறைய பிள்ளைகளுக்கு சூட்டியுள்ளதையும் பார்க்கலாம்.

ஆலீஸ் வந்த சில ஆண்டுகளில் வெவ்வேறு பணிகளிருந்த மிஷனெரிகள் ஒவ்வொருவராக தங்கள் நாடுகளுக்கு திரும்பினார்கள். ஆலீஸுடன் லேடீஸ் பங்களாவில் தங்கியிருந்த இளம்பெண்களும் தங்கள் சேவையினை 10, 15 ஆண்டுகளோடு முடித்துக்கொண்டு தங்கள் நாடுகளுக்கு திரும்பி திருமணம் செய்துக்கொண்டனர். கடையாக மேரி மெக்நாப் என்ற இளம்பெண்ணும் ஆலீஸும் மட்டுமே மிஞ்சினார்கள்.

மேரி மெக்நாப் மிஸியம்மா அந்தக் கால ராஜ்தூத் மோட்டார் சைக்கிளை ஆம்பூர் ரோட்டில் ஓட்டிக்கொண்டுப் போவதை மக்கள் பேரதிசயமாக நின்று வேடிக்கைப் பார்ப்பார்கள். இன்னொரு பக்கத்தில் ஆலீஸ் மிஸியம்மா ஜீப்பை ஓட்டிக்கொண்டு கிராமங்களுக்குள் போகையில் கிராமமே நின்று வேடிக்கைப் பார்க்கும். தன்னைத் தேடி வருவோரின் துயர் துடைக்கும் மனக்கரங்கள் கொண்டவராக் இருந்தார் ஆலீஸ். மருத்துவ சேவைகள், கல்வி கற்க உதவிகள், வீடற்றவர்களுக்கு வீடுகள் கட்ட உதவி பெரிய அறுவைச் சிகிச்சைகளுக்கு உதவி என்று ஆலீஸ் செய்துக் கொண்டிருந்தார்.

அதோடு நில்லாமல் ஆம்பூரைச் சுற்றியிருக்கும் ஏழை எளிய மக்கள் மாற்றுத் திறனாளிகள் ஆதரவற்ற மக்கள் என அனைவரையும் மாதத்தின் முதல் வியாழக்கிழமைகளில் வரவைத்து அவர்களுக்கு உதவிகள் செய்வதையும் தனது கடமைகளில் ஒன்றாக கொண்டிருந்தார் ஆலீஸ். தன்னை தேடி வரும் எல்லாருடனும் அகமகிழ்ந்து உறவாடுவார். நகைச்சுவையாக பேசி மகிழுவார். மிஸியம்மா இருக்குமிடம் எப்போதும் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது.

மிஸியம்மா ஆலீஸின் இன்னொரு முக்கிய பண்பு எல்லா உயிர்களையும் நேசித்தல். நூற்றுக்கணக்கான நாய்களை வளர்த்தார் ஆலீஸ். அவற்றுக்கு தம் உறவினர்கள் நண்பர்களின் பெயர்களையே வைத்திருந்தார். ஆடு, கோழிகள், மயில், வான்கோழி, பூனைகள் என ஆலீஸ் தன்னைச் சுற்றி நிறைய உயிரினங்களைப் பராமரித்தார். லேடீஸ் பங்களாவைச் சுற்றி நிறைய மரங்கள் செடிக் கொடிகள் இருந்தன. அதின் மீது அளவில்லாத அன்பினைப் பொழிந்தார் ஆலீஸ். வாரம் ஒரு நாள் தன்னுடனிருக்கும் சமையல் செய்யும் ரத்தினம்மா உதவியாளர் ஜான், ஓட்டுநர் ரவி ஆகிய மூவருடன் சேர்ந்து தோட்ட வேலைகள் செய்வார். தான் குடிக்கும் ஒவ்வொரு குவளை நீரிலும் ஒரு சிறு பகுதியினைத் தவறாமல் ஏதோ ஒரு செடிக்கு ஊற்றுவதை எப்போதும் பின்பற்றினார்.

1989-ம் ஆண்டு அவரோடு தங்கியிருந்த மிஸி மேரி மெக்நாபும் தன் பணியினை முடித்துக்கொண்டு தாய் நாடு திரும்பி விட்டார். லேடீஸ் பங்களாவாக இருந்த அந்த வீடு ஆலீஸ் ஒருவரோடு லேடி பங்களாவாக மாறிப்போனது. ஆலீஸ் தனியாகிப் போனார். அவருக்கும் திருமணம் குடும்பம் குழந்தைகள் என்ற ஆசை இருந்தது. ஆனால் அப்படி தான் போய் விட்டால் ஒவ்வொரு வாரமும் கிராமங்களின் தனது வருகைகாக காத்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு யார் பதில்?

**தனது தனிப்பட்ட குடும்ப வாழ்வா? மக்களுக்கான சேவையா? என்ற நிலை வருகையில் ஆலீஸ் தனது தனிப்பட்ட சுகங்களை துறந்து மக்களுக்கான வாழ்க்கையினை ஏற்றுக்கொண்டார்.**

2018-ல் ஒரு நாள் இரவில் ஆலீஸ் கால் தடுமாறி விழுந்ததில் இடுப்பில் எலும்பு முறிவு ஏற்பட்டு வேலூர் சி எம் சி மருத்துவமனியில் சிகிச்சைப் பெற்றார். இனி எழுந்து நடக்க முடியாது. சக்கர நாற்காலியில் அமர்ந்து நகர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். ஆனாலும் அதிலேயே அவர் ஊர் ஊராக சென்று மக்களுக்கு மருத்துவம் பார்த்தார். கொரோனா ஊரடங்கில் தனி ஒருவராக அந்த பங்களாவில் தன் நாட்களைக் கழித்தார் மிஸியம்மா ஆலீஸ். 2015 ல் திருச்சபை அரசியலால் பெதஸ்தா மருத்துவமனை மூடப்பட்டது. மருத்துவமனை அவரின் கண்களுக்கு முன்பாக சூரையாடப்பட்டது. யாரும் கேட்கவில்லை. அவ்வளவு பெரிய மருத்துவமனை உருவாக தம் வாழ்வைத் தந்த ஒவ்வொரு மிஷனெரிகளையும் நினைத்து கடவுளுக்கு நன்றி சொன்னபடியே பெதஸ்தாவுக்காக வேண்டுதல் செய்து வந்தார்.

ஆலீஸ் அவரது அப்பாவின் செல்லம், அப்பாவுக்கு தனது மகள் தன்னைப் போலவே மிஷனெரியாக சேவை செய்வதில் மிகுந்த மகிழ்ச்சி. அந்த அப்பா இறந்த போது ஆலீஸால் போக முடியவில்லை. சில மாதங்கள் கழித்து போய் அம்மாவுடன்

ஒரு மாதம் கூடவே இருந்தார். அந்த நாட்களில் அம்மாவும் இறந்துப் போனார். அப்பாவின் இறப்பிற்கு ஆறுதல் தேடிப் போனவர் அம்மாவையும் இழந்தவராக திரும்பி வந்து தனது சேவையினைத் தொடர்ந்தார்.

அடுத்ததாக அண்ணன் இறந்து போனார். ஆலீஸால் போக முடியவில்லை. அடுத்து ஒரு அக்கா இறந்தபோதும் ஆலீஸ் போகவில்லை. இங்கு பலவேறு சிகிச்சைக்காக வரும் மக்களை விட்டு விட்டு போக மனம் வரவில்லை. **'உயிரோடு இருக்கும்போது அவர்களோடு இருக்கவில்லை, இப்போ மட்டும் போய் என செய்ய போகிறோம்'** என்று இருந்துவிட்டார்.

அவரது குடும்பத்தில் மீதியாக உயிரோடு இருக்கும் ஆலீசின் அந்த ஒரு அக்காவுக்கு வயது 90. அவர்தான் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை உதவியாளர் ஜானின் போன் வழியே ஆலீஸுடன் பேசுவார். அது ஒன்றே ஆலீசுக்கு ஆறுதல். ஆனாலும் அண்ணன் அக்கா குழந்தைகள் எவ்வளவோ வருந்தி அழைத்தார்கள். 'கடைசி கொஞ்ச காலம் எங்களோடு வந்து இருங்க,' என்று ஆனால் ஆலீஸ்: இதுதான் என்னோட ஊரு இங்கு உங்களைப் போலவே நிறைய பேர் நான் வந்துட்டா இங்குள்ள நாய்கள் மனிதர்கள் எல்லாரையும் யார் பார்த்துக்கொள்ளுவார்கள் என்று சொல்லி அமெரிக்க திரும்பி போவதைத் தவர்த்து வந்தார். தனது உயிரும் உடலும் இந்தியாவில் தான் முடிய வேண்டும் என்று சொல்லிக்கொண்டார்.

எப்படியும் மீண்டும் பெதஸ்தா மருத்துவமனை திறந்து விடுவார்கள் என்று நம்பி வேண்டியபடியே இருந்தார். அவரின் ஒரே கனவு அதுவாகவே இருந்தது. தனக்கு உடல்நிலை பாதிக்கப்படும்போதெல்லாம் இப்படி எவ்வளவு ஏழை எளியவர்கள் மருத்துவம் பார்த்துக்கொள்ள முடியாமல் இருக்கிறார்களோ நமது மிஷன் மருத்துவமனை இருந்தால் எவ்வளவு பேர்களுக்கு நம்பிக்கையும் ஆறுதலாகவுமிருக்கும் என்று எண்ணியபடியே இருப்பார். ஆலீஸின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. சக்கர நாற்காலியில் உட்கார முடியாமல் படுத்த படுக்கையாகிவிட்டார். ஆனாலும் உதவியாளர்களின் துணையோடு படுத்த நிலையிலிருந்தே மக்களுக்கு சிகிச்சைகள் செய்து வந்தார்.

அவர் தங்கியிருந்த அந்த லேடி பங்களாவில் ஒரே ஒரு டியூப் லைட் மட்டுமே எரியும். அந்தக் காலத்து பழைய மின் விசிரி இரைச்சலோடு மெதுவாக சுற்றிக் கொண்டிருக்கும். ஆலீஸுக்கு கைப்பேசி இல்லை. எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத அந்த கட்டடத்துக்குள் தனியாகவே தங்கியிருந்தார்.

ஐந்து பழைய கவுன்கள் மட்டுமே மிஸியம்மா ஆலீஸின் உடைகள். புதிய உடைகள் வாங்கவோ, நல்ல உணவு சாப்பிடவோ ஆலீஸ் ஒருபோதும் விரும்புவதில்லை. ஆனால் வாரம் ஒரு நாள் ஐந்து கிலோ ஈரல் வாங்கி வந்து அவித்து அரைத்து அதனுடன் கோதுமை ரவையைச் சேர்த்து பிஸ்கெட்டுகள் செய்து லேடீஸ் பங்களாவிலும் பெதஸ்தாவிலுமிருக்கும் இருபதுக்கும் அதிகாமான நாய்களுக்கு ஒருவேளை ஈரல் பிஸ்கெட் ஒருவேளை பெடிகிரியும் (பெட்டி பெட்டியாக வாங்கி வைத்திருக்கும் நாய்களுக்கான உணவு) அதற்கான தட்டுகளில் வைத்து அன்றாடம் மூன்று வேளை உணவளிப்பார். அதற்காகவே ஒருவரை வேலைக்கு வைத்திருந்தார் ஆலீஸ் மிஸியம்மா. வாரம் ஒரு நாள் எலும்புகள் வாங்கி வந்து அவித்து நாய்களுக்கு கொடுப்பார். தன்னைச் சுற்றி இருக்கும் நாய்களுக்கு தனது கைகளாலேயே ஊட்டி விடுவார். சத்தமிட்டபடியே அவரைச் சுற்றிச்சுற்றி வந்து வாங்கிக்கொண்டு குழைந்து கத்தும் ஒவ்வொரு நாய்களும்.

தன்னை வருத்தி சிறுசிறு சேமிப்புகள் செய்து ஏழைகளுக்கும் தன்னைத் தேடி வருவோருக்கு உதவுவதையே வாஞ்சையாக கொண்டிருந்தார். கேரளா ஆந்திரா கர்நாடக என எங்கு இயற்கை பேரிடர் வந்தாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான உணவு தண்ணீர், உடைகள் என எல்லாவற்றையும் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு அங்குப் போய் நிவாரணப் பணிகளைச் செய்வார் மிஸியம்மா. தொடக்க காலத்தில் ஆம்பூரைச் சுற்றி நிறைய தொழுநோயாளிகள் இருந்தார்கள். வீடுகளால் கை விடப்பட்டு ஊருக்கு வெளியில் ஒதுக்குப் புறமான இடத்தில் விடப்பட்டிருப்பவர்களைத் தேடிப் போய் அவர்களின் புண்ணுகளைத் துடைத்து மருந்துகள் போட்டு விடுவார். ஆலீஸின் இந்த ஈடு இணையில்லாத தியாகத்தை உணர்ந்த அமெரிக்க மிஷனெரி அமைப்பான L C M S ஆலீஸை 'ஐ இ எல் சியின் அன்னை தெரேசா' என்று மகுடம் சூட்டியது.

ஆம்பூர் மக்களோ அவரை **'ஆம்பூரின் அன்னை தெரேசா'** என்றே போற்றி புகழ்ந்து வந்தார்கள். வந்த எல்லா மிஷனெரிகளும் கணிசமான ஆண்டுகள் சேவைகள் செய்து விட்டு தம் கடைசி காலத்தை தம் தாய் நாட்டில் தம் உறவுகளோடு கழித்திட திரும்பி விடுவார்கள். ஆனால் ஆலீஸ் தமது 87 வது வயதிலும் நடக்க முடியாமல் போன நிலையிலும் இந்திய மண்ணில் எல்லா இன்னல்களையும் சகித்து மக்களை நேசித்து வந்தார்கள்.

விவிலியம் **'உன்னைப் போல் பிறனையும் நேசி'** என்கிறது, ஆலீஸ் தன்னை விட பல மடங்கு பிறரை நேசித்தார். ஆலீஸுக்கு குடும்பம் இல்லை ஆனால் பல குடும்பங்கள் நிலைப் பெறுவதற்காக தன்னை இழந்தார். ஆலீஸுக்கு குழந்தைகள் இல்லை ஆனால் பலர் வாழ்வில் குழந்தைப் பேறு உருவாவதற்காக தன் வாழ்வைத் தந்து அவர்கள் பிள்ளைகள் பெற்று மகிழ்வதைக் கண்டு மகிழ்ந்தார். ஆலீஸ் நல்ல ஆடைகளை உடுத்திக்கொள்ளவில்லை பிறருக்கு நல்ல ஆடைகளை வாங்கி உடுத்திக்கொள்ள செய்தார். இப்படி இயேசுவின் அன்பை மக்களுக்கு அனுபவமாக கொடுக்க தன் வாழ்வின் கடைசி நொடியையும் பிறருக்காக தந்த தேவதை ஆலீஸ் காலத்தில் கலந்தார். **கதையாக எழுத்தாக இல்லை வாழ்வாக ஒருவர்** கடந்த செப்டம்பர் 30-ம் நாள் வரை வாழ்ந்தார். அதற்கு அக்டோபர் 3-ம் நாள் ஆம்பூரே கண்ணீரில் மிதந்ததே சாட்சி.

ஆலீஸ் எனும் தேவதை 57 ஆண்டுகளாக வருத்தப்பட்டு பாரஞ்சுமப்பவர்களுக்கான இளைப்பாறுதலாக வாழ்ந்தது காலத்தின் புதிய வரலாறு.

# பூர்வீகத்தை நோக்கி. . .




## கனம் டக்கர் ஐயர் குடும்பம்

பொ. குட்டி ஜாஸ்கர் ஜெபராஜா,
**போப் கல்லூரி, சாயர்புரம்**



பதினெட்டாம் நூற்றாண்டில் மெய்ஞ்ஞானபுரத்தில் நன்றாக வாழ்ந்த ஒரு தம்பதியருக்கு பிறக்கும் குழந்தைகள் மூன்று வயது வரை வளர்ந்து பின் இறந்து கொண்டிருந்ததாம். தம்பதியருக்கு ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து வரும்போது அவர்கள் மிகவும் விசனத்துடன் காணப்பட்டு முத்தின குழந்தைகள் இறந்தது எல்லாம் நமது பாவத்தினாலா அல்லது சாபத்தினாலா என்று கலக்கத்தில் இருந்த சமயத்தில் மிஷனெரி கனம் J . டக்கர் (Rev. J. Tucker) ஐயரவர்கள் வருவதை கேள்விப்பட்டு, ஐயரவர்களிடம் தங்கள் நிலைமையை கூறி கனம் J. டக்கர் ஐயரவர்களிடம் ஜெபித்து சென்றார்களாம். அந்த பையன் மூன்று வருடங்களுக்கு மேல் வாழ்ந்து ஏசுவடியான் என்ற பெயரோடு கனம் J. டக்கர் ஐயரவர்கள் பெயரையும் சேர்த்து ஏசுவடியான் J டக்கர் என்று பெயர் வைத்தார்களாம். அந்த பெற்றோர் தனது மகனை குருத்துவ ஊழியத்துக்கு அனுப்ப வேண்டுமென்று கடவுளிடம் பொருத்தனை பண்ணி, தனது மகனை குருத்துவ ஊழியத்துக்கு அனுப்பினார்களாம். இந்த இந்திய கனம் J. டக்கர் ஐயரவர்கள் புதுக்குளம், ஆனந்தபுரம், குப்பாபுரம், மெய்யூர், தர்மநகரம், நெடுங்குளம் ஆகிய ஊர்களில் குருவானவராக பணி செய்தார்கள்.

ஐயர் அவர்களுக்கு மூன்று குமாரர்கள் 1. கனம் ஞானையா ஏசுவடியான் டக்கர், 2 திரு டேவிட் ஏசுவடியான் டக்கர் மற்றும் 3. திரு துரைசாமி ஆவர். கனம் ஞானையா ஏசுவடியான் டக்கர் (Rev. G. Y. Tucker) ஐயரவர்கள் பட்டம் பெற்று கடலூரில் ஊழியம் செய்து வந்தார்கள். அவர்கள். நாசரேத்தில் 'நாட்டையர்' என்று அழைக்கப்பட்ட கனம் ஏசுவடியான் ஐயர் அவர்கள் மகள் மேரி அவர்களை மணமுடித்து கடலூரில் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒன்பது குமார, குமாரத்திகள் அதில் இருவர் இறந்து விட்டார்கள்.

ஐயரவர்களது மூத்த மகள் திருமதி. எஸ்தர் மேரி அவர்கள் திரு. துரை சாமி (D. E. O) அவர்களை மணந்தார்கள். அவர்களுக்கு மூன்று பெண் பிள்ளைகள் இரண்டு ஆண் பிள்ளைகள், அவர்களது கடைசி மகள் ப்பிரீடா பத்மினி அவர்களை ஆபிரகாம் பண்டிதரின் மகள் வழிப்பேரன் இசைக்கதைச் செல்வர், இன்னிசைச் செம்மல், அருட்கலைஞர் என்றெல்லாம் அழைக்கப்பட்ட கலைமாமணி D. A. தனபாண்டியனை திருமணம் செய்து கொண்டார்கள்.



அவர்களுக்கு ஆறு பெண் குழந்தைகள் மூத்த மகளாகப் பிறந்த மல்லிகாவுக்கு இசை என்பது உயிரோடு கலந்த ஒன்று மீன் குஞ்சுக்கு நீந்த கற்று கொடுக்கவேண்டுமா?' என்பது போல், தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் கொள்ளுப் பேத்தியான மல்லிகா இயற்கையிலேயே இனிய குரல் வளமும், தனது தகப்பனாரின் இசைஞானமும் பெற்றிருந்தார். மேனாட்டு இசையில் வித்தகரான தனது அத்தை மகன் T. A. G. துரைப் பாண்டியனை கரம்பிடித்த மல்லிகா கணவரோடு சேர்ந்து தேவநாமத்துக்கு மகிமையாக இசைக் கச்சேரிகள் செய்ய ஆரம்பித்தார். தகப்பனாரின் கர்நாடக இசையும் கணவரின் மேனாட்டு இசையையும் ஒருங்கிணைத்து. அழகான இசையுடன் பல பாடல்கள் உருவாயின. **'ஜீவவசனம்**







**கூறுவோம்'. 'ஏசுவுக்கு நமது'** போன்ற பாடல்களை தனது தகப்பனாரோடு இசைத்தட்டில் பாடியுள்ளார்கள்.

அவர்களின் தங்கை திருமதி உமா செல்லப்பா அவர்கள் மிகவும் திறம்பட பாடக்கூடியவர்கள் அவர்கள் தனது கணவரோடு கடவுளுக்காக **'அமைதி நேர ஊழியம்'** சென்னையில் செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பாடிய பல பாடல்கள் H. M. V. COLUMBIA, INRICO இசைத்தட்டுகளில் வெளிவந்தன. இவரது தந்தை இசையமைத்த கர்நாடக இசைப்பாடல்கள் பலவற்றை இவர் தனது சகோதரிகளான தேவிகா மற்றும் உமாவுடன் இணைந்து பாடி இருக்கிறார்கள் .

கனம் ஞானையா ஏசுவடியான் (Rev. G. Y. Tucker) ஐயரவர்களின் மகள் திருமதி ரூபி புஷ்பம் ஏசுவடியான் இவர்களது மகன் திரு. A. Y. ஜெயச்சந்திரன் அவர்கள் ஒரு கட்டிட பொறியாளர். இவர் திருமதி. சௌந்தர்யாவைத் திருமணம் செய்தார்கள். இந்தத் தம்பதியருக்கு பிறந்த மூன்றாவது பெண் குழந்தை டாக்டர் சகுந்தலா



ஞானமுத்து. இவர்கள் பாளையங்கோட்டை Dr. ராஜ்குமார் ஞானமுத்துவை மணந்தார்கள் இவர்கள் தற்போது தனது கணவருடன் பாளையங்கோட்டையில் பல் மருத்துவமனை நடத்திவருகிறார்கள். இவர்களுடைய மகள் டாக்டர் திருமதி ஷீல்பா தினகரன்.

கனம் ஞானையா ஏசுவடியான் (Rev. G. Y. Tucker) ஐயரவர்களின் கடைசி மகளான டெய்சி நவரத்தினமலர் அவர்கள் நாகர்கோவிலை சேர்ந்த டாக்டர் குணமுடையாக டேவிட் போவாஸ் (G. D. Boaz) அவர்களை மணமுடித்தார்கள். டாக்டர் போவாஸ் டெய்சி தம்பதியாரின் மகளாக பாரதிபால் அம்மையார் அவர்கள் 1936 ஆம் ஆண்டு பிறந்தார்கள்.

இவரது தந்தையார் சென்னைப் பல்கலைகழகத்தில் பேராசியராக பணியாற்றியதால் இவரது குடும்பதினர் சென்னையில் வாழ்ந்து வந்தனர். இவருக்கு ஹேமா, பிரதீப், திலிப் என்ற மூன்று பிள்ளைகள். ஊடகங்கள் வளராத, அக்காலத்தில் சுமார் 50 வருடங்களுக்கு முன்பே இவர் பல பாடல்களை பாடி இசைத்தட்டில் வெளியிட்டார்கள் நியூசிலாந்திலுள்ள ஆக்லாந்து இறை இசை வானொலி நிலையத்தார் இவருக்கு 'Nightingale of Tamil Christian Song' என்ற சிறப்பு பட்டத்தை அளித்து கௌரவித்தனர்.

இந்த கனம் டக்கர் குடும்பத்தை சேர்ந்தவர்களின் குடும்ப கூடுகை மெய்ஞ்ஞானபுரம் பரி. பவுலின் ஆலயத்தில் சில வருடங்களுக்கு முன் நடைபெற்றது. இவர்கள் எல்லோரும் மெய்ஞ்ஞானபுரத்தின் முன்னோர்களின் வழி வந்தவர்கள் என்பது பெருமையே. பல அரிய தகவல்களை தந்து உதவிய டாக்டர் சகுந்தலா ஞானமுத்து அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மருத்துவ, இசை ஊழியத்தை தலைமுறை தலைமுறையாய் தொடர்ந்து செய்ய தேவன் இக்குடும்பத்தையும் இவர் சந்ததியாரையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக.



# ஜெனானா

## மிஷனரி சங்கம் – பகுதி 1

சுஜித் S


புராட்டஸ்டன்ட் (Protestant) மிஷனரிகள் இந்தியாவிற்கு வந்தபோது, இந்திய சமூகம் மூடநம்பிக்கை மற்றும் அறியாமையில் மூழ்கியிருந்தது. இந்த பணித்தளத்திலே, **ஜெனானா மிஷனரிகள்** பெண்கள் மற்றும் சாதி ஒடுக்கு முறைகளை எதிர்த்துப் போராடினர்.

திருநெல்வேலி மாவட்டம் தமிழ்நாட்டின் தெற்கே அமைந்துள்ளது. மொத்த மக்கள்தொகையில் இவர்கள் ஐந்தில் ஒரு பங்காக இருந்தனர். இம்மாவட்டம் புராட்டஸ்டன்ட் மிஷனரிகளின் முக்கிய இடமாக விளங்கியது.

எஸ்.பி.சி.கே (S.P.C.K.), எஸ்.பி.ஜி (S.P.G.), சி.எம்.எஸ் (C.M.S.) மற்றும் சர்ச் ஆஃப் இங்கிலாந்து ஜெனானா மிஷனரி சங்கம் (Church of England Zenana Missionary Society -C.E.Z.M.S.) ஆகிய அமைப்புகள் இங்கு பல ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் பணியாற்றின.

'ஜெனானா' (Zenana) என்ற பாரசீக வார்த்தைக்கு **'பெண்களின் குடியிருப்புகள்'** என்று பொருள். அக்காலத்தில் இந்தியப் பெண்கள் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் முடக்கப்பட்டு, வெளியுலகத் தொடர்பின்றி வாழ்ந்தனர்.

1852இல் வங்காளத்தில் (Bengal) திருமதி மேரி ஜேன் கின்னெயிர்ட் (Mrs. Mary Jane Kinnaird) என்பவர் இந்திய



அரசின் ஆதரவுடன் முதன்முதலில் ஜெனானா பணியைத் தொடங்கினார். மிஷனரிகளின் மனைவிமார்கள் ஜெனானா மிஷனரி சங்கத்துடன் சேர்ந்து பணிபுரிந்தது மேலும் பல பெண் மிஷனரிகளை இந்தியாவிற்கு வர வழிவகுத்தது.

ஜெனானா பைபிள் அண்ட் மெடிக்கல் மிஷன் (Zenana Bible and Medical Mission) மற்றும் C.E.Z.M.S. போன்ற சிறப்பு அமைப்புகள் உருவாயின. C.E.Z.M.S. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனைகளை நிறுவியது.

பாளையங்கோட்டையை (Palayamkottai) தலைமையகமாகக் கொண்டு C.E.Z.M.S.- S.P.G., மற்றும் C.M.S. ஆகிய அமைப்புகளின் பெண் மிஷனரிகள் செயல்பட்டனர். C.E.Z.M.S. மிஷனரிகளும், போதகர்களின் மனைவிமார்களும் இந்துப் பெண்களை அவர்களது வீடுகளில் சந்தித்தனர்.

பெண் மிஷனரிகள் சர்ச் மிஷனரி சொசைட்டியுடன் (Church Missionary Society) நெருங்கிய தொடர்பில் இருந்தனர். ஒருங்கிணைந்த செயல்பாடுகளுக்காக அவர்கள் தொடர்ந்து கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தினர்.

பெண் மிஷனரிகள் மற்றும் வேதாகம பெண்களின் தொடர் வருகைகள் இந்துப் பெண்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. இம்மிஷனரிகள் அவர்களின் கல்வி, மருத்துவம் மற்றும் சமூக விடுதலைக்காக அயராது பாடுபட்டனர்.

இவ்வாறு, பல சவால்களுக்கு மத்தியிலும் ஜெனானா மிஷனரிகள் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், சமூக நீதிக்காகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றினர்.

### ஜெனானா மிஷனரிகளின் முக்கிய பணிகள்

திருநெல்வேலியில் (Tirunelveli) இந்திய பெண் கல்வி சங்கம் மூலம் ஜெனானா மிஷன் தனது பணியை தொடங்கியது. இது சி.எம்.எஸ் (C.M.S) உடன் இணைந்து செயல்பட்டது.

திருமதி அன்னாள் ஆரோகியம் சத்தியநாதன் (Mrs. Annal Arokiam Sathianathan), அருள்திரு.டபிள்யூ.டி. சத்தியநாதனின் (Rev. W.T. Sathianathan) மனைவி, தன் வீட்டில் சிறுமிகளுக்கான போர்டிங் பள்ளியை தொடங்கினார். அவர் கடாச்சபுரத்தின் (Kadachapuram) அருள்திரு. ஜான் தேவசகாயத்தின் (Rev. John Devasagayam) மகள் ஆவார். அவர் சிறந்த தமிழ் எழுத்தாளராக இருந்து, 'தி குட் மதர்' (The Good Mother) உள்ளிட்ட புத்தகங்களை எழுதினார்.

1864-ல் சென்னையின் (Chennai) சூளை (Choolai) பகுதிக்கு மாறிய பின்னும் ஜெனானா பணியைத் தொடர்ந்தார். 1890-ல் அவரது மறைவுக்குப் பின், மகள்கள் அன்னா ஜோஹன்னா (Anna Johanna), ஹென்ஸ்மேன் கேத்ரின் (Hensman Katherine) மற்றும் மருமகள்கள் கிருபாபாய் கிஸ்டி (Krupabai Khisty), கமலா கிருஷ்ணம்மா (Kamala Krishnamma) ஆகியோர் பணியைத் தொடர்ந்தனர்.

1900-ல் கிருபாபாய் கிஸ்டி 'இந்திய பெண்கள்' என்ற இதழைத் தொடங்கினார். கமலா கிருஷ்ணம்மா சென்னை பல்கலைக்கழகத்தின் முதல் பெண் முதுகலை பட்டதாரி மற்றும் தேசிய மிஷனரி சங்கத்தின் (N.M.S) முதல் பெண் துணைத் தலைவர் ஆவார்.

1872-ல் திருநெல்வேலி போதகர் ஜேசுதாசனின் மனைவி பல பணிகளை செய்தார். 1876-ல் திருமதி எமிலி லூயிஸ் (Mrs. Emily Lewis) திருநெல்வேலி நகரில் ஜெனானா பணியின் தலைமையில் இருந்தார். அவர் 'ஹோம் ஆஃப் ரெஸ்ட்' (Home of Rest) கட்டிடத்தை நிறுவினார்.

மிஸ் நியூ (Miss New) என்பவர் இடையங்குடி (Idayangudi), சாத்தான்குளம் (Sathankulam), சுவிசேஷபுரம் (Suviseshapuram), கிறிஸ்தியாநகரம் (Christianagaram) ஆகிய இடங்களில் பணியாற்றினார். திருமதி எலிசா கால்டுவெல் (Mrs. Eliza Caldwell) குட்டம் (Kuttam) பகுதியில் சானார் பெண்களுக்கு கல்வி புகட்டினார்.

பிஷப் ஸ்ட்ராச்சனின் (Bishop Strachan) மனைவி நாசரேத்தை (Nazareth) மாதிரி கிராமமாக மாற்றினார். மிஸ் எலினோர் கார் (Mrs. Eleanor Carr) பல்வேறு வட்டாரங்களில் பெண்களுக்கான சிறப்பு கூட்டங்களை நடத்தினார். திருமதி ஹாட்ஜ் வாக்கர் (Mrs. Hodge Walker) பண்ணைவிளை (Pannaivilai), நல்லூர் (Nallur), டோனாவூர் (Dohnavur) ஆகிய இடங்களில் ஞாயிற்றுக்கிழமை பள்ளிகளை (ஞாயிறு பள்ளி) நடத்தினார்.

சி.இ.ஜெட்.எம்.எஸ் (C.E.Z.M.S) பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ சேவைகளை வழங்கியது. ஏமி கார்மைக்கேல் (Amy Carmichael) டோனாவூர் குழுவுடன் இணைந்து அவர்கள் பணியாற்றினார்கள். மொத்தம் 244 கிராமங்களில் 862 பெண்களுக்கு கல்வி வழங்கப்பட்டது.

ஜெனானா மிஷனரிகள் நோயாளிகளை பராமரித்து, மருத்துவம், நேர்மை, ஒழுக்கம், சேவை மற்றும் நற்பண்புகளை கற்பித்தனர். இவ்வாறு திருநெல்வேலி மாவட்டத்தில் பெண் முன்னேற்றத்திற்கு அவர்கள் பெரும் பங்காற்றினர்.

### ஜெனானா மிஷனரிகளின் பணி

ஜெனானா (Zenana) மையங்கள் பல எழுப்புதல் மிகுந்த பலன்களைத் தந்தன. ஜெனானா மிஷன் பெண்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்குக் கல்வி புகட்டும் பணியில் ஈடுபட்டது. பெண் கல்விக்காக அவர்களுக்கு என்று தனிப் பள்ளிகளையும் திறந்தது. பெண்களை விழிப்புணர்வு அடையச் செய்வதே இவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. ஆரம்பத்தில் மிஷனரிகளின் மனைவிமார்களே இப்பணியைச் செய்தனர். இந்திய வேதாகம பெண்கள், வயதான விதவைகள், வயதில் மூத்த பெண்மணிகள், கிறிஸ்தவ ஆசிரியைகள் ஆகியோர் மிஷனரிகளுக்கு உதவினர். சில விசேஷ சந்தர்ப்பங்களில், திருமணமாகாத பெண்களும் இளம் விதவைகளும் ஜெனானா ஹோம்களுக்கு அனுப்பப்பட்டனர்.

ஜெனானா ஆசிரியைகளுக்கு வாரத்தில் மூன்று நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்வரும் தகுதிகளின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

1. வேதாகமம் பற்றிய முழுமையான அறிவு,
2. பிற மத பழக்க வழக்கங்கள் மற்றும் மூடநம்பிக்கைகள் பற்றிய புரிதல்,
3. பாடல்கள் பாடவும் பிறருக்காக ஜெபம் செய்யவும் உள்ள மனப்பான்மை ,
4. நல்ல குணம் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கை,
5. மிஷன் வெளியிட்ட பத்திரிகைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் பற்றிய நல்ல அறிவு.

ஒவ்வொரு வார இறுதியிலும் ஜெனானா ஆசிரியைகள் தங்கள் அறிக்கைகளை மிஷனரி பெண்மணிகளிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. ஜெனானா பணியை ஒழுங்கமைக்கும்போது, பெண் மிஷனரிகள் பல சிரமங்களை எதிர்கொண்டனர். ஏனெனில் கிறிஸ்தவரல்லாத பெண்கள், மிஷனரிகள் தங்கள் வீடுகளுக்கு வருவதை தங்கள் தெய்வங்களை விரட்டும் முயற்சியாகக் கருதினர். இத்தகைய சிரமங்களால் தளராமல், மிஷனரிகள் ஜெனானாக்களுக்கு அடிக்கடி வருகை தந்து மையங்களைத் தொடங்கினர்.

ஜெனானா பணியில் ஈடுபட்டிருந்தபோது, கிறிஸ்தவப் பெண்கள் பர்தா பெண்களின் நிலையையும், உணவு மற்றும் பாத்திரங்கள் தொடர்பான ஜாதிக் கட்டுப்பாடுகளையும் நேரில் காண முடிந்தது. அவர்களின் பொறுப்பில் இருந்த பெண்கள் முகம் மறைக்காமல் பொதுவெளியில் தோன்ற முடியாது. இதனால், இந்து மற்றும் முஸ்லிம் பெண்களுக்குத் தனித்தனி பள்ளிகள் திறக்கப்பட்டன. அவர்களின் பாரம்பரிய பெற்றோரை புண்படுத்தாமல் இருக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

வாடகைக் கட்டிடங்களில் ஜெனானா பெண்களுக்கு தாய்மொழி மற்றும் ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்பட்டது. இக்கல்வி மூலம் அவர்கள் மூடநம்பிக்கைகள் மற்றும் சமூக நடைமுறைகளை கேள்வி கேட்கும் அளவுக்கு முன்னேறினர். பாட திட்டத்தில் கிறிஸ்தவக் கல்வியும் பொதுக் கல்வியும் இடம்பெற்றன. கிறிஸ்தவ போதனைகளுடன், அரசு கல்வித்துறை அங்கீகரித்த பாடத்திட்டத்தையும் ஆசிரியர்கள் பின்பற்றினர். வாசிப்பு, எழுத்து, கணிதம், வரலாறு, புவியியல், மொழிகள், இசை, சமையல், நூற்பு, நெசவு, ஊசி வேலை, தையல், மற்றும் கைவினைப் பொருட்கள் செய்தல் ஆகியவற்றை அவர்கள் கற்பித்தனர்.

ஜெனானாக்களில் கல்வி கற்பிக்கும் முறை பள்ளிகளில் பின்பற்றப்படும் முறையிலிருந்து வேறுபட்டது. பள்ளியில் மாணவர்கள் முழுமையாக ஆசிரியர்களின் கட்டுப்பாட்டில் இருந்து ஒழுங்குபடுத்தப்பட்டனர். ஆனால் வீடுகளில் சூழ்நிலை முற்றிலும் வேறாக இருந்தது. மாணவிகள் பெரும்பாலும் வீட்டு சூழலின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்தனர். குடும்பத்தில் மூத்தவர்களின் அழைப்பு, நோயுற்றவர்களின் உதவி கோரல், அல்லது வேறு வீட்டு வேலைகள் அவர்களின் கவனத்தை சிதறடித்தன.

ஜெனானா ஆசிரியைகள் மற்றும் பைபிள் பெண்கள் பற்றிய துண்டுப் பிரசுரங்கள் அச்சிடப்பட்டு மக்களிடையே விநியோகிக்கப்பட்டன. ஆரம்பத்தில் இந்துப் பெண்கள் ஜெனானா மிஷனரிகளை தீண்டத்தகாதவர்களாகக் கருதி, அவர்களின் நோக்கங்களை சந்தேகத்துடன் பார்த்தனர். பின்னர், வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளைப் பெற்ற பிறகு, கடினமான வாழ்க்கையில் ஆறுதல் தரும் ஆதாரமாக அவர்களைக் கண்டனர். இறுதியில் வேலை செய்ய, விளையாட, சந்திக்க என வீட்டிலிருந்து வெளியே வந்தனர்.

## சமூகத் தீமைகள்

மதத்தின் பெயரால் தீண்டாமை, சதி, பெண் சிசுக்கொலை, பர்தா முறை, தேவதாசி முறை, பலதார மணம், விதவைகள் மீதான திருமண கட்டுப்பாடுகள், குழந்தை திருமணம், மற்றும் கல்வியறிவின்மை போன்ற சமூகத் தீமைகள் நடைமுறையில் இருந்தன. முஸ்லிம் பெண்கள் கல்வியறிவின்மை, பலதார மணம், மற்றும் பர்தா முறை காரணமாக துன்பப்பட்டனர். திருநெல்வேலி (Tirunelveli)க்கு வந்தபோது, ஜெனானா (Zenana) மிஷனரிகள் சாதியற்ற இந்துக்கள் புறக்கணிக்கப்பட்டு தீண்டத்தகாதவர்களாக கருதப்பட்டதைக் கண்டனர்.

ஆரம்பத்தில், சர்ச் மிஷனரி சொசைட்டி (Church Missionary Society) ஜெனானா மிஷனரிகளின் மனைவிகளை பெண் மிஷனரிகளாக பணியாற்ற அனுப்பியது. காலப்போக்கில், திருமணமாகாத பெண் மிஷனரிகள் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பரப்ப இந்தியாவிற்கு வந்தனர். அவர்கள் ஏழைகளையும் நோயாளிகளையும் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். சமூகத் தீமைகளை ஒழிக்க, பெண் மிஷனரிகள் கேர்ள் கைட்ஸ் (Girl Guides), வை.டபிள்யூ.சி.ஏ (Y.W.C.A.), மற்றும் எழுத்தறிவு திட்டங்களைத் தொடங்கினர்.

பஞ்சகாலங்களில் அவர்கள் பாராட்டத்தக்க பணிகளைச் செய்தனர். கல்விக்கு தகுதியற்றவர்கள் என கருதப்பட்டவர்களுக்கும் கல்வி புகட்டினர். மிஷனரி மனைவிகள் தொடங்கிய சிறிய பள்ளிகள், காலப்போக்கில் பகல்நேர பள்ளிகள், விடுதிப் பள்ளிகள், தொழிற்கல்வி பள்ளிகள், ஞாயிற்றுக்கிழமை பள்ளிகள், அனாதை இல்லங்கள், மற்றும் ஜெனானாக்களாக வளர்ந்தன. பெரும்பாலான பெண் மிஷனரிகள் திருமணம் செய்துகொள்ளாமலேயே இருந்தனர். மிஷனரிகளின் சகோதரிகளும் மகள்களும் சமூக சேவையில் ஈடுபட்டனர். சில நேரங்களில், வெளிநாட்டு மிஷனரிகளின் விதவைகளும் பல்வேறு கிறிஸ்தவ சங்கங்களால் அனுப்பப்பட்டனர்.

ஜெனானா மிஷனரிகள் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பயிற்சித் திட்டங்களை நிறுவினர். பார்வையற்றோர், ஊனமுற்றோர், மற்றும் பேசும் திறன் அற்றவர்களுக்கான நிறுவனங்களைத் தொடங்கினர். பெரும் உதவியுடன், பயனாளிகள் படிப்படியாக தங்களைக் கவனித்துக் கொள்ளவும், தேவையான சமூக முன்னேற்றத்தை அடையவும் கற்றுக்கொண்டனர்.

தொடரும். ..

# நூல் வெளியீடு





கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு வட திருநெல்வேலியில் கனம் ராக்லாந்து ஐயர் செய்த பணியினை சாயமலை பகுதியில் பின் தொடர் பணியாக கிராமங்களில் நற்செய்தி பணியினை விடிவெள்ளி ஆசிரமத்தினை நிறுவி மக்களுக்கு பல்வேறு சேவைகளை செய்த மியூரியல் எம் பிராஸ்ட் வாழ்க்கை வரலாறு அம்மையாரின் வாழ்க்கை சரித்திரத்தையும் ஜாய் சாலோமோன் அம்மையார் மற்றும் வயனா பிலிப் அம்மையார் இவர்களின் பின் தொடர் பணிகளையும் 1963 ஆம் ஆண்டு குமாரி ஜே ஜாய் சாலமோன் அம்மையார் அவர்கள் சாயமலை திருவிளக்கு என்னும் நூலில் வரலாற்றை மிக தெளிவாக நமக்கு எழுதியிருந்தார்கள்.

சாயமலை திருவிளக்கு என்னும் நூலினை திருநெல்வேலி திருமண்டல பெண்கள் சங்கத்தினர் முயற்சியினால் வரலாற்று சங்க பதிப்பில் கடந்த நாட்களில் சாயமலை திருவிளக்கு என்னும் நூல் மறு பதிப்பு செய்யப்பட்டது.

இந்த நூலினை நம்முடைய வரலாற்று சங்க நண்பர்கள் பிரிண்ட் செய்வதற்கு உதவி செய்தார்கள். கடந்த (02.10.2024) இரண்டாம் தேதி நம்முடைய பேராயர் ஐயா மற்றும் கன்னியாகுமரி பேராயத்தின் பேராயர் அவர்களால் மிகச் சிறப்பாக வெளியிடப்பட்டது. முயற்சி செய்த உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். திருமண்டல புத்தக நிலையத்தில் கிடைக்கும் மற்றும் திருமண்டல ஸ்டிபன் நீல் நூலகத்திலும் கிடைக்கும்.

# ஆஸ்க்வித் அம்மையார்

**அனி ஜேன் ஆஸ்க்வித் அம்மையார்**



பாளையங்கோட்டை பார்வையற்றோர் பள்ளி விசித்திரமாகத் தொடங்கியது பாளையங்கோட்டை சாரா டக்கர் நிறுவனங்களின் நிர்வாகியாக செல்வி. அனி ஜேன் ஆஸ்க்வித் அம்மையார் ரிபோன் (Ripon) என்னுமிடத்தில் 1851 ஜனவரி 13ம் நாள் பிறந்தார். சி.எம்.எஸ் சங்கத்தினால் இலண்டன் மிஷனெரியாக தென்னிந்திய பகுதியில் வந்தடைந்தார். சாராள்தக்கர் நிறுவனங்களின் கண்காணிப்பாளராக ஆஸ்க்வித் அம்மையார் 1881 ஆம் ஆண்டு பொறுப்பேற்றார்.

1888-இல் ஒரு நாள் பார்வையற்ற ஒரு பையன் பிச்சை கேட்க வளாகத்தினுள்ளே வந்தான் ஒரு பள்ளியினுள்ளே தான் வந்திருப்பதை அவன் கண்டபோது, தர்மம் கேட்பதற்குப்பதிலாக கல்வி வேண்டுமெனக் கேட்டான். அவனது தேவையைச் சிந்தித்து. செல்வி ஆஸ்க்வித் பார்வையற்ற பிள்ளைகளுக்கான ஒரு பள்ளியைப் பற்றிக் கனாக் கண்டார். பார்வையற்றாருக்குக் கற்பிப்ப தெப்படியெனக் கற்றுக்கொள்ள அவர் தாய்நாடு சென்றார். இங்கிலாந்தில் பிரெய்லி முறையில் எழுதப்படிப்பது நடைமுறையில் இருந்தது. அம்மையார் இங்கிலாந்து சென்று பிரெய்லி முறையைக் கற்று வந்து பையனுக்கும் பார்வையற்ற இன்னும் சிலருக்கும் கற்றுக்கொடுத்தார்கள். 1890-இல் பார்வையற்ற குழந்தைகளுக்கான முதல் வகுப்பு திறக்கப்பட்டது. இப்பள்ளி தமிழகத்தில் முதல் பார்வையற்றோர் பள்ளி என்ற பெருமையினையும் பெற்றுத் திகழ்கின்றது.

அதன்பின்னர் 1908ஆம் ஆண்டு பார்வையற்றோருக்கு தனிப்பள்ளியாக 24 ஏக்கர் நிலப்பரப்பில் தற்போதைய தரிசனமனையில் செயல்படத் தொடங்கியது. அம்மையார் அவர்கள் கல்வி மட்டுமன்றி பருத்தி நெசவினை பார்வையற்ற மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். பார்வையற்ற மகளிர் இல்லம் ஒன்றையும் தொடங்கினார்.

அம்மையார் 1924ஆம் ஆண்டு செப்டம்பர் 29 ஆம் நாள் இங்கிலாந்திலுள்ள டன்பிரிஜ்வெல்ஸ் என்னுமிடத்தில். தம் 73வது வயதில் விண்ணுலகை அடைந்தார். ஆஸ்க்வித் அம்மையாரின் இங்கிலாந்து தேசத்தில் 'Kent' என்னுமிடத்தில் Sussex Cemetery-ல் ஆஸ்க்வித் அம்மையாரின் கல்லறை இருப்பது 100 ஆண்டுகளுக்குப் பின் சதிருநெல்வேலி திருமண்டல பேராயர் வீஜுஎ Rt.Rev. Dr.ARGST.பர்னபாஸ் ஐயா அவர்களின் முயற்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து தேசத்தில் வசிக்கும் நமது திருமண்டல உறுப்பினர்கள் அம்மையாரின் கல்லறைக்கு நேரில் சென்று மலர் வளையம் வைத்து நினைவுகூர்ந்தார்கள்.

# ஓடிப் போனவன்...




**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத இதழில் இரண்டு ஆண்டுகளாக எழுதி புகழ்பெற்ற ஏமி கார்மைக்கேல் நாவலை எழுதிய நாவலாசிரியர் முனைவர் த ஜான்சி பால்ராஜ் அவர்கள் எழுதும் புதிய தொடர்....**



**முனைவர்.ஜான்சி பால்ராஜ்**
நாவலாசிரியர், திருநெல்வேலி

'இங்கபாரு வெள்ளையம்மா, நீ இப்படி அழுதுகிட்டே அலைஞ்சா எங்களல்லாம் விட்டுட்டு நீயும் போய் சேர்ந்திருவியோன்னு எனக்கு நெசமா பயமா இருக்கு புள்ள. நானொரு யோசன சொன்னா கேப்பியா தாயி. . . ?' என்றான் வேலாயுதம்.

'சொல்லுண்ணே. . . எனக்கு உசிரோடு இருக்கவே புடிக்கல. நாந்தான் முத்துபயல ஊட்டவுட்டே அடிச்சிப் பத்தினேன்னு நேத்து கண்ணப்பன் பொஞ்சாதி என்னை சாடைமாடயா பேசுதான்ணே. நான் காது கேக்காத மாதிரியே வந்துட்டேன். எம்புள்ளைய வளக்க மாதிரிதான அவனையும் வளத்தேன். ? அவன் சொன்ன பேச்சை கேக்காட்டா நான் அவன திருத்தாண்டாமாண்ணே? ஆ. . . ஆ. . . . ஏ ஏ ஏ. . என்னப் பெத்த ராசா. . . எங்க போய் தொலஞ்சால?' என்று வெள்ளையம்மாள் ஒப்பாரி வைக்க. . . அந்தத் தெருவே வழக்கம் போல கூடி விட்டது.

'என்னடே, மாடசாமி, அந்த பயல் ஓடிபோயி ரெண்டு பொங்க கொடை முடிஞ்சாச்சு. இன்னும் ஒங்க ஊட்ல எளவு ஒப்பாரிதானா. ? சீக்கிரமா ஒரு முடிவுக்கு வாங்கடே' என்றான் வேலாயுதம் .

'ஆமா வேலாயுதொ, என்ன செய்யன்னே தெரியல எனக்கு. ஊட்டுக்குள்ள வந்தாலே இப்பிடி வேதனையா தான் இருக்கு. அவன தேடாத எடமில்ல. ஊருமில்ல. இப்ப எனக்கு இவளதான் சமாளிக்க முடியல' என்ற மாடசாமி அழுது கொண்டிருந்த மனைவியைப் பார்த்தான்.

'அது சரி, கொஞ்சொ எம் பேச்சை கேளு. மாடசாமி. வார வெள்ளி கெழம ஆத்தாளுக்கு பொங்க வைப்போம். அவக்கிட்டையே முத்துவைப் பற்றி வாக்கு கேப்போம். நீ என்ன சொல்லுதா மாடசாமி. ?'

'ம்ம். . . சரின்னே' என்று தலையாட்டினார் மாடசாமி. 'சரி நான் இப்பவே போயி வாக்கு சொல்லுதவள பாத்து பேசிட்டு அவளுக்கு கொடுக்க வேண்டியத கொடுத்துட்டு வாரேன். . . சரியா.. ?'

'சரிசரி' என்று தலையாட்டினார் மாடசாமி, அறைகுறை மனதோடு. விசயராமபுரம் என்ற அந்த ஊருக்கே தலைவர் இந்த மாடசாமி தான். நாட்டாமை, கோவில் தர்மகர்த்தா, ஊர்க் காவலன். . என்று எல்லாமே அவர்தான்.

ஓடிப்போன முத்து அவரது தங்கைமகன். முத்துவும், அவன் சகோதரியும் பிறந்து சில ஆண்டுகளில் அவனது தாயும், தகப்பனும் இறந்து போக மாமனார் மாடசாமி வீட்டில் தான் இருவரும் வளர்ந்தனர். தான் இல்லாத நேரத்தில் தன் மனைவி கண்டித்ததால் ஆத்திரப்பட்டு வீட்டைவிட்டு ஓடிப்போனமுத்து, பிறகு என்ன ஆனான் என்றே தெரியாமல் போக. . . அன்றிலிருந்தே மாடசாமி நொந்து போனார். பழைய கம்பீரம் அவரிடம் இல்லை. அனைத்தையும் இழந்துவிட்ட விரக்தியில் அலைந்து கொண்டிருந்தார். மனைவி வெள்ளையம்மாள் தான் இதில் குற்ற உணர்ச்சியோடு வீட்டைவிட்டே வெளியேவராமல் மாதக்கணக்கில் அடைந்ததே கிடந்தாள்.

வெள்ளிக்கிழமை ஆத்தா சன்னிதியில் பொங்கலிட்டு அருள்வாக்கு கேட்க ஊர்க் கூடியது. 'ஆத்தா. . உனக்கு தெரியாதது ஒன்னுமில்ல. அகில உலகமும் உங்கண்ணுக்குள்ள இருக்கு. தலைவரு மாடசாமி மருமொவன் முத்து காணாம போய் ரெண்டு வருசமாச்சு. . . . !' என்று தொடங்கினார் வேலாயுதம்.

'ஆமா. . . எல்லாம் தெரியும். . . தெரியும். அதுக்கு என்ன இப்ப. . . . ?' என்றபடி ஆவேசமாக முன்னும் பின்னும் நடந்தவாறு ஆடிக்கொண்டிருந்தாள் பொன்னுத்தாயி.

அந்த ஊருக்கே பெரிய சாமியாடி அவள்தான். 'இந்த வருசம் மழை வருமா வராதா? வெள்ளாமை வெளையுமா வெளாயாதா?, பெறக்க போவது பொட்ட புள்ளையா ஆம்புள்ள புள்ளையா?' என்றெல்லாம் கூட வாக்கு சொல்வாள். முன்னப் பின்ன சொன்ன வாக்கு பொய்த்துப் போனால். . . . ' ஆத்தா பொய் சொல்வாளால சொல்லு!?அவா ஒருநாளும் வாக்கு தவற மாட்டா. நீ தான் ஏதோ தப்பு தண்டம் பண்ணியிருப்பா. அதுக்கு தான் அவ உன்ன தண்டிச்சிட்டா. போங்கல. . . . போய் ஒரு சோடி கோழியாவது வெட்டி பொங்கவிட்டு ஆத்தா கோவத்தை ஆற்றுங்கல!' என்று கோபத்தில் கர்ச்சித்து விட்டு அமைதியாகி விடுவாள்.

அந்த ஊர்க்காரர்களும் சாமியாகவே அவளைப் பார்த்து கும்பிட்டனர். அவள் பேச்சுக்கு யாரும் மறுப்பேச்சு கொடுத்ததில்லை. அந்த ஊரில் எவ்வளவுப் பெரிய ஆட்களையும் ஒருமையில் அழைத்துப் பேசும் அதிகாரம் பெற்ற ஒரே பெண் அவள்தான்.

'ஆத்தா. . .. முத்து இப்ப எங்க இருக்கான்?. அவன் இருக்கானா, இல்லையான்னு சொல்லு தாயி' என்ற வெள்ளையம்மாளின் அண்ணன் மாரியப்பன் கும்பிட்ட கையோடு அருகில் வந்து நின்றிருந்தான். வெள்ளையம்மாள் முந்தாவணியால் முகத்தை மூடியபடி அழுகையோடு மூக்குறிஞ்சினாள்.

திடீரென்று கையிலிருந்த திருநீற்றை அள்ளி இருவர் முகத்திலும் எரிந்தாள் பொன்னுத்தாயி. பக்தி பரவசத்தோடு கூப்பிய கைகளைத் தலைக்கு மேல் உயர்த்தி, பிறகு தலைக்கு இரக்கி. . . திரும்பவும் பழைய இடத்திற்கே கொண்டு வந்து தலை வணங்கி நின்றான் மாரியப்பன். அவர்களைச் சுற்றி ஊர்மக்கள் எல்லோரும் கூட்டமாக நின்றிருந்தனர்.

' ஏய் . . . வெள்ளயம்மா அழாதம்மா. . .. நானிருக்கேன். . . . ம்ம் அழாத அழாத. . . ' என்று நாக்கை மடக்கி கடித்தபடி வெள்ளையம்மாளின் தலையில் தன் உள்ளங்கையை வைத்து அழுத்தினாள். அவள் நிற்க பலனின்றி அருகில் நின்ற கணவன் மேல் சரிந்து தொப்பென்று விழுந்தாள்.

'ம். . .. அங்க பாரு, ஆத்தா அவளுக்குள்ளேயும் இரங்கிட்டா. . . . கொண்டாங்கடா மஞ்சத்தண்ணிய' என்று கையை நீட்டிக்கொண்டே நான்கு பக்கமும் இரண்டு மூன்றடி முன்னும் பின்னும் சென்று சென்று ஆடிக்கொண்டிருந்தாள்.

ஒருவன் ஒரு பித்தளை செம்பில் தண்ணீர் கொண்டு வந்து அவள் கையில் கொடுத்தான். அதை வாங்கிய பொன்னுத்தாயி வெள்ளையம்மாளின் முகத்தில் தெளிக்க. . . அவள் எதுவும் சொல்லாமல் எழுந்து அமர்ந்தாள். சற்று நேரத்தில் வெள்ளையம்மாளும் சாமி வந்ததைப்போல நடுங்கி கொண்டிருந்தாள். இருந்த நிலையிலேயே உடல் மட்டும் அவள் கட்டுப்பாட்டை மீறி முன்னும் பின்னும் அசைந்தது.

'கேளுங்கல. . அந்த முத்து இந்த பூலோகத்துல எங்கேயும் இல்ல. மேல. . . போய்ட்டான். அவன் உங்க குடும்பத்துக்கே காவல் தெய்வமா நிக்கிறாம்பா. அன்னா நிக்காம்பாருல மாடசாமி. உங்கண்ணுக்குத் தெரியுதால. . !? ம். . . பயப்படாத. எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன். எனக்கு தொடர்ந்து மூனு வெள்ளி கெழமை பொங்க வை. அவனுக்கு நாளைக்கே கருமாதி செஞ்சிருங்க. காத்து கருப்பு உன்வாசலண்டை அண்டாம நான் பார்த்துக்கிறேன். என்ன. . . . சொல்லுதா மாடசாமி. . . ??' என்று கண்களை உருட்டி நாக்கை வெளியில் நீட்டி முழு ஆத்தாளாக மாறி காட்டினாள் பொன்னுத்தாயி. அந்த ஊரிலேயே மாடசாமியை நீ , நான் என்று பேசும் ஒரே பெண், ஆத்தாள் இரங்கி ஆடும் இவள் மட்டும்தான்.

'அய்யோ. . . . நாஎன்னத்த சொல்ல. . . என்னத்த செய்ய. . . . ? இப்பிடி போயிட்டியே. . . . ராசா' என்று தலையிலும், நெஞ்சிலும் அடித்து வெள்ளையம்மாள் அலற. . . . சுற்றி நின்ற எல்லோரும் திடீரென்று செத்துப் போன ஒருவனுக்காக அழுது புலம்புவதைப் போல அழுகையும் ஒப்பாரியுமாக அங்கிருந்து மாடசாமி வீட்டை நோக்கி நடந்தனர்.

**தொடரும். ..**


கிறிஸ்தவ **வரலாற்றுச் சுவடுகள்**

கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் நடத்தும் கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் மாத ஆய்விதழை நண்பர்கள், உறவினர்களுக்கு அறிமுகப்படுத்த அன்போடு கூட கேட்டுக் கொள்ளுகின்றேன். கடந்த நான்கு வருடங்களாக ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வெளி வந்து கொண்டு இருக்கின்றது. மறைக்கப்பட்ட, மறைந்த, மறந்த வரலாற்றுப் பக்கங்களை அடுத்த தலைமுறையினரின் கரங்களில் கொடுப்பது நம் கடமை.

சங்கத்தின் **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** மாத ஆய்விதழை நீங்கள் தொடர்ந்து பெற்றுக் கொள்ள விரும்பினால் அதற்கான ஆண்டு சந்தா 600 ரூபாய் ஐந்து ஆண்டுக்கான சந்தா 3000 ரூபாய் மட்டுமே. மற்றும் G-Pay மூலம் நன்கொடை செலுத்த விரும்பினால் 91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும். காசோலை மற்றும் வரைவோலை செலுத்த **'கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்'** (CHRISTAVA VARALATRU SUVADUGAL) என்ற பெயரில் எடுத்து அனுப்பவும்.

நன்கொடை சந்தா செலுத்திய தகவலை கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண் அல்லது வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு மறக்காமல் தெரியப்படுத்தவும்.

**வங்கி விபரம்**

**Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL**

**A/c Number : 1748 020000 5614**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com



ஜா.ஜான் ஞானராஜ்
திருநெல்வேலி

# காணியாளன் குடியிருப்பு

## திருச்சபையின் வரலாறு

திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன்மகாதேவி தாலுகாவில் திருநெல்வேலியில் இருந்து மேற்கே சுமார் 24 கிலோமீட்டர் தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தை ஒட்டி அமைந்துள்ள கிராமம் காணியாளன் குடியிருப்பு. பத்தமடை மற்றும் மேல செவலில் இருந்து தெற்கே சுமார் ஆறு கிலோமீட்டர் தொலைவிலும், கங்கனாங்குளத்திலிருந்து வடகிழக்கே சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவிலும் அடர்ந்த மரங்கள் சூழ்ந்த இயற்கை எழில் மிக்க கிராமமே காணியாளன் குடியிருப்பு.

### காணியாளன் குடியிருப்பு – பெயர் காரணம்

காணியாளன் குடியிருப்பு கிராமத்தை உருவாக்கிய பெரியவர் திரு. சுடலைமுத்து இந்த கிராமத்தில் உள்ள அனைத்து காணி நிலங்களுக்கும் முழு உரிமையாளர் என்ற பெயரில் காணியாளர் - காணியாளன் என்று அழைக்கப்பட்டார். காணியாளன் குடியிருந்த ஊர் என்ற அடிப்படையில் அவரது பெயரால் இந்த கிராமம் காணியாளன் குடியிருப்பு என்று அழைக்கப்படுகிறது. காணியாளன் சுடலைமுத்து நாடார் அவர்களே இந்த கிராமத்தின் ஆதி தந்தை அவரே இந்த கிராமத்தை உருவாக்கியவர். சுடலை முத்து நாடாரும் அவரது 5 ஆண் மக்களும் அந்த 5 ஆண் மக்களின் வழி மரபினரது குடும்பங்களையும் கொண்டதாகவே நீண்ட பல ஆண்டுகளாக இக்கிராமம் இருந்து வந்தது. பிற்காலத்தில் பிற ஊர்களில் இருந்து இங்கு அநேக நாடார் சமூக குடும்பத்தினர் குடியேறி உள்ளனர்.

### அறிமுகம் – சமூக சூழல்

திரு. சுடலைமுத்து அவர்கள் மற்றும் அவரது ஐந்து ஆண் மகன்களின் காலம் முதல் இன்றைய காலகட்டம் வரை நாடார் சமூகத்தவர்களே இக்கிராமத்தில் வசித்து வருகின்றனர். முற்றிலும் இந்திய கிறிஸ்தவர்களின் நற்செய்தி பணியால் குறிப்பாக கரிசல் சபையாரின் சுவிசேஷ அறிவிப்பால் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட ஒரு கிராமம் காணியாளன் குடியிருப்பு.

### கானியாளன் குடியிருப்பில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்

முதல் மூன்று குடும்பத்தினர் சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னர் காளியாளன் குடியிருப்பைச் சொந்த ஊராகக் கொண்ட தொடக்க கால குடும்பத்தைச் சேர்ந்த திரு. செல்லையா நாடார் அவர்கள் ஓடைக்கரை சி எம் எஸ் சுத்தாங்க சுவிசேஷ சபையைச் சார்ந்த கிறிஸ்தவ பெண்ணான கோயில் பிள்ளை அம்மாளைத் திருமணம் செய்தார்கள். கோயில் பிள்ளை அம்மாள் கிறிஸ்தவ பக்தி மிகுந்தவர். ஆதலால் இந்த குடும்பத்தினர் திருமணத்திற்கு பின்னர் தேவாலய ஆராதனைகளுக்கு காணியாளன் குடியிருப்பு கிராமத்தில் இருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கரிசல்பட்டி சி எம் எஸ் சுத்தாங்க சுவிசேஷ சபை பரி. காபிரியேல் தேவாலயத்திற்கு சென்று வந்தனர். அந்தக் காலகட்டத்தில் கரிசல்பட்டி சி எம் எஸ் சுத்தாங்க சுவிசேஷ சபை பரி. காபிரியேல் தேவாலயத்தில் இருந்து சபையார் சுவிசேஷ ஊழியங்களுக்கு கானியாளன் குடியிருப்புக்கு வர ஆரம்பித்தனர். இந்நிலையில் இந்த செல்லையா நாடார் - கோயில் பிள்ளை தம்பதியரின் ஒரே மகள் ஜெபமணி அம்மாளுக்கும் கரிசல்பட்டி சி எம் எஸ் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையைச் சார்ந்த திரு தேவதுணைக்கும் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டு கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றது. காணியாளன் குடியிருப்பு திரு. செல்லையா நாடார் திருமதி கோயில் பிள்ளை அம்மாள் தம்பதியருக்கு ஒரே மகளாக ஜெபமணி அம்மாள் இருந்தபடியால் இந்த திருமணம் முடிந்தவுடன் திரு. தேவதுணை

நாடார் தமது மனைவி வீட்டோடு காணியாளன் குடியிருப்பில் குடியேறினார்கள். இந்த திருமணத்தைத் தொடர்ந்து கரிசல்பட்டி சி எம் எஸ் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையார் காணியாளன் குடியிருப்பிற்கு கிறிஸ்தவ சமயத்தை அறிவிப்பதில் கூடுதல் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர். வாரந்தோறும் சுவிசேஷ ஊழியங்களுக்கு வருவதும் திரு. தேவதுணை - திருமதி ஜெபமணி அம்மாள் வீட்டில் ஜெபக் கூட்டங்கள் நடத்துவதும் கரிசல்பட்டி சி. எம். எஸ். சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் இருந்து பெண்களாக வந்து காணியாளன் குடியிருப்பில் வீடுகளைச் சந்தித்து ஜெபிப்பதும் நடைபெற்றது. செல்லையா நாடார் - கோயில் பிள்ளை அம்மாள் மற்றும் தேவதுணை - ஜெபமணி அம்மாள் குடும்பத்தினரே காணியாளன் குடியிருப்பின் முதல் கிறிஸ்தவக் குடும்பம். இந்நிலையில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு ஜெபமணி அம்மாளின் சித்தப்பா மகன் பால்துரை டேவிட் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தார். அவருக்கு உகந்தநாச்சியார்புரம் CSI சபையைச் சார்ந்த கிறிஸ்தவ பெண்ணான டெய்சி ராஜம்மாள் உடன் திருமணம் ஒழுங்கு செய்யப்பட்டு கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடைபெற்றது.

பால்துரை டேவிட் - டெய்சி ராஜம்மாள் குடும்பம் காணியாளன் குடியிருப்பில் இரண்டாவது கிறிஸ்தவ குடும்பம். கரிசல்பட்டி சி எம் எஸ் சுத்தாங்க சுவிசேஷ சபையில் இருந்து ஜெபக்கூட்டம் நடத்துகிறவர்கள் திரு. தேவதுணை மற்றும் திரு. பால்துரை டேவிட் ஆகிய இருவர் வீட்டிலும் ஜெபக் கூட்டங்களை நடத்தினார்கள். வாரந்தோறும் சுவிசேஷ ஊழியங்களை காணியாளன் குடியிருப்பில் தொடர்ந்து செய்தார்கள். இந்த இரண்டு குடும்பங்களுக்குப் பிறகு சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு காணியாளன் குடியிருப்பைச் சொந்த ஊராகக் கொண்ட திரு. நம்பி அவர்கள் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டார்கள். டெல்லி கான்பூர் பட்டணத்திற்கு பணிக்கு சென்று திரும்பிய நம்பி அவர்கள் தாசன் என்ற பெயரில் திருமுழுக்கு பெற்றுக் கொண்டார்கள். மேல உப்பூரணியைச் சார்ந்த செல்வி அவர்களைக் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் செய்தார்கள். ஆக காணியாளன் குடியிருப்பில் கிறிஸ்தவ குடும்பங்களின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்தது. இவர்களே காணியாளன் குடியிருப்பின் தொடக்க கால கிறிஸ்தவர்கள். இந்த தொடக்க கால கிறிஸ்தவர்கள் கரிசல்பட்டி சி எம் எஸ் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபை பரி. காபிரியேல் தேவாலயத்திற்கு சென்று வந்தார்கள்.

### கரிசல் சேகர வேதாகம பெண் சகோதரி ப்ளோரா அவர்களின் நற்செய்தி பணி

1979 முதல் கரிசல் CSI சேகர வேதாகம பெண் சகோதரி புளோரா அவர்களின் நற்செய்திப் பணி காணியாளன் குடியிருப்பில் தொடங்கியது. பல எதிர்ப்புகள் வந்த போதும் அநேகர் கேலிப் பேச்சுகள் பேசியபோதும் அதைக் கண்டு மனம் தளராமல் காணியாளன் குடியிருப்பில் வேதாகம பெண் சகோதரி புளோரா அவர்கள் வீடு வீடாக சென்று பெண்களை சந்தித்து அவர்களது குடும்ப காரியங்களுக்காக ஜெபிப்பது, நோயிலிருந்து குணமாக ஜெபிப்பது, அசுத்த ஆவி கட்டுகளில் இருந்து அவர்கள் விடுவிக்கப்பட ஜெபிப்பது என ஜெப ஊழியத்தை தீவிர படுத்தினார்கள். இதன் காரணமாக அநேக குடும்பத்தில் மாற்றங்கள் ஏற்பட்டது. பலர் மறைமுகமாக கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ளத் தொடங்கினார்கள். வேதாகமப் பெண் சகோதரி. புளோரா அவர்களோடு ஊழியத்திற்கு பிள்ளைகுளம் சபை பெண்களும் காணியாளன் குடியிருப்புக்கு வருகை தந்தார்கள்.

### காணியாளன் குடியிருப்பு கிறிஸ்தவ குடும்பங்கள் பிள்ளைகுளம் சி. எஸ். ஐ சபைக்கு சென்று வருதல்

1990 - 1995 க்கு உட்பட்ட காலகட்டத்தில் கரிசல்பட்டி சி எம் எஸ் சுத்தாங்க சுவிசேஷ திருச்சபையில் சபை மக்களுக்கும் தலைமை போதகருக்கும் இடையே பெரிய அளவில் கருத்து வேற்றுமை இருந்து வந்ததால் காணியாளன் குடியிருப்பில் சபை உருவாக்கும் பணியை அவர்களால் செய்ய இயலாத நிலை இருந்தது. கானியாளன் குடியிருப்பில் ஓர் கிறிஸ்தவ திருச்சபையை எப்படியாவது உருவாக்க வேண்டும் என விரும்பிய அவர்கள் முதல் மூன்று குடும்பத்தினரையும் அவர்களைத் தொடர்ந்து கிறிஸ்தவத்தை ஏற்றவர்களையும் காணியாளன் குடியிருப்புக்கு மிக அருகில் அரை கிலோமீட்டர் தொலைவில் இருந்த பிள்ளைகுளம் சி. எஸ். ஐ. தேவாலயத்திற்கு செல்ல ஊக்கப்படுத்தினார்கள். காணியாளன் குடியிருப்பு சபையார் பிள்ளைகுளம் சி. எஸ். ஐ சபைக்கு சென்று வரத் தொடங்கினார்கள். சி. எஸ். ஐ. திருச்சபையோடும் கரிசல் சேகர சி. எஸ். ஐ. குருவானவர் அவர்களுடனும் நல்ல தொடர்பு அவர்களுக்கு ஏற்பட்டது. காணியாளன் குடியிருப்பில் ஓர் கிறிஸ்தவ திருச்சபையை உருவாக்க கரிசல் சேகர சி. எஸ். ஐ. திருச்சபையார் முன் வந்தார்கள்.

### இடைக்கால சபை வளர்ச்சி

1994 இல் காணியாளன் குடியிருப்பு சபையில் புதிதாக கிறிஸ்தவத்தை ஏற்ற இரண்டு குடும்பங்கள். பா நடராஜன் என்ற ஜான் ராஜன் - ருக்குமணி, P. துளசிமணி என்ற அற்புதமணி - பால் ரத்தினம் இணைந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து S. V. துரை - வின்சி குடும்பத்தினர் சபையில் இணைந்தார்கள். சபையார் எண்ணிக்கை ஆறு குடும்பங்கள் ஆகப் பெருகியது. பின்னர் ஏழாவது குடும்பமாக N. ஜெபத்துரை - ரெபேக்காள் குடும்பத்தினர் சபையில் இணைந்தார்கள்.

### புதிய தேவாலயம் கட்ட எடுக்கப்பட்ட முயற்சிகள்

1995 இல் ஏழு குடும்பங்கள் காணியாளன் குடியிருப்பில் கிறிஸ்தவர்களாக இருந்தார்கள். மேற்கண்ட ஏழு குடும்பத்தினரும் இணைந்து புதிதாக தேவாலயம் கட்ட முயற்சிகளை முன்னெடுக்க ஆரம்பித்தார்கள்.

### தேவாலயம் அமைக்கப்படுதல் –1998

காணியாளன் குடியிருப்பில் புதிய தேவாலயம் கட்ட 9 சென்ட் நிலம் 27.11.1997 இல் எடுக்கப்பட்ட முயற்சியின் காரணமாக 16.02.1998 இல் கிரையப் பத்திரம் பதிவு செய்யப்பட்டது. (கிரைய ஆணை எண் 60/1998. ) நிலம் வாங்குகிற நேரத்தில் கரிசல் சேகர தலைவராக அருள்திரு. டெம்பிள் ஐயரவர்கள் இருந்தார்கள். நிலம் வாங்கப்பட்டவுடன் அதில் மேற்கூறையாக ஓலைவேயப்பட்ட

தேவாலயம் அமைக்கப்பட்டது.

**புதிய சபை ஊழியர் நியமனம்**

காணியாளன் குடியிருப்புக்கு புதிய சபை ஊழியர் ஆக கரிசலைச் சொந்த ஊராகக் கொண்ட திரு. டேவிட் ராஜ் அவர்களின் மகன் D. ஜோசப் அவர்கள் 1998 இல் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் தற்போது பாலியர் சங்கம் - TDCM குருவானவராகச் செயல்படுகிறார்கள். கரிசல்பட்டியைச் சொந்த ஊராகக் கொண்டவரும் கரிசல்பட்டி சேகரத்தில் சபை ஊழியராகப் பணி செய்து வந்தவருமான திரு. R. ஐசக்சாம் தியாகராஜ் ஆசிரியர் அவர்களும் அவர்களது மனைவி புளோரா ஐசக் ஆசிரியை அவர்களும் காணியாளன் குடியிருப்பு கிராமத்திற்கு வருகை தந்து ஆலயத்திற்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொடுத்தனர். அக்காலத்தில் திருமதி. புளோரா ஐசக் ஆசிரியை அவர்களும் கரிசலைச் சார்ந்த தாய்மார்களும் காணியாளன் குடியிருப்பு சபை தேவாலயத்தில் வைத்து நடைபெறும் உபவாச கூட்டங்களுக்கு தவறாது வருகை தருவார்கள்.

**மேற்கூறையாக ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் கொண்ட தேவாலயம்**

1999 இல் இயற்கை சீற்றம் காரணமாக தேவாலயத்தின் மேற்கூறையாக இருந்த ஓலைகள் பெரிதும் சேதுமடைந்ததால் ஓலைகள் அகற்றப்பட்டு ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் அதில் அமைக்கப்பட்டது. அந்நேரம் சபை ஊழியராக இருந்த திரு. காசிதுரை அவர்களும் சபையைச் சார்ந்த திரு. P. சுந்தர் துரைப்பாண்டியன் அவர்களும் இதற்கான முயற்சிகளை முன்னெடுத்தார்கள்.

நெல்லை பேராயர். மகாகனம். S. ஜெயபால் டேவிட் அவர்களின் காணியாளன் குடியிருப்பு வருகை -26. 05. 2002 கங்கனாங்குளத்தில் கட்டப்பட்டிருந்த புதிய தேவாலயத்தை பிரதிஷ்டை செய்ய நெல்லை பேராயர். மகாகனம். S. ஜெயபால் டேவிட் அவர்கள் 26.05.2002 அன்று கங்கனாங்குளத்திற்கு வருகை தந்தார்கள். அவர்கள் கங்கனாங்குளத்திற்கு வருகை தருவதற்கு முன்பாகவே கங்கனாங்குளம் அருகில் தேவாலயம் இல்லாத கிராமமாக காணியாளன் குடியிருப்பு கிராமம் இருப்பதைக் குறித்த தகவல் பேராயர் அவர்களுக்கு சொல்லப்பட்டிருந்தது. கங்கனாங்குளம் தேவாலய பிரதிஷ்டை ஆராதனை முடிந்தவுடன் அக்காலத்தின் காணியாளன் குடியிருப்பு தேவாலய சேகர கமிட்டி மெம்பர் திரு பால்துரை டேவிட் அவர்கள் பேராயர் அவர்களை காணியாளன் குடியிருப்பு கிராமத்திற்கு வருகை தருமாறு அன்புடன் அழைத்தார்கள். அழைப்பை ஏற்று காணியாளன் குடியிருப்புக்கு வந்த பேராயர் மகாகனம். S. ஜெயபால் டேவிட் அவர்கள் ஓலையை மேற்கூறையாகக் கொண்ட சிறிய தற்காலிக தேவாலயம் இருப்பதையும் புதிய தேவாலயம் கட்ட சபையார் முயற்சிகள் முன்னெடுப்பதையும் சபையாரிடம் கேட்டறிந்தார்கள். திரு. பால்துரை டேவிட் அவர்களின் மகன் திரு. ஜெயக்குமார் ராஜசிங் அவர்களிடம் பாளையங்கோட்டையில் உள்ள பேராயர் இல்லத்திற்கு வாருங்கள் அனைத்து உதவிகளையும் தாம் செய்வதாக வாக்கு கொடுத்தார்கள். அதன்படி பேராயர் இல்லம் சென்று திரு P. ஜெயக்குமார் ராஜசிங் அவர்கள் பேராயர் அவர்களை சந்தித்தபோது காணியாளன் குடியிருப்பில் தேவாலயம் கட்டுவதற்கான திருமண்டல செயற்குழுவின் அனுமதியை உடனடியாக பெற்றுக் கொடுத்தார்கள். அதோடு மட்டுமல்லாமல் நன்கொடை பிரிப்பதற்கான பல்வேறு வழி வகைகளையும் காட்டி உதவி செய்தார்கள். பேராயர் அவர்கள் செய்த உதவி என்றும் நினைவு கூறத்தக்கது. அப்போதைய சேகர தலைவர் அருள்திரு. சாமுவேல் சுவாமிதாஸ் சபை ஊழியர் திருமதி லதா டென்சிங் மற்றும் சபை பெரியோர்கள் ஆகியோர் காணியாளன் குடியிருப்பில் புதிய தேவாலயம் கட்டுவதற்கான முயற்சிகளை முன்னெடுக்கத் தொடங்கினார்கள். அதன் பயனாக சுமார் மூன்று சென்ட் நிலம் (1335 சதுர அடி) தேவாலய பயன்பாட்டிற்காக சபையார் கொடுத்த நிதியின் மூலம் 23. 01. 2003 அன்று வாங்கப்பட்டது. (ஆவண எண். 31/2003).

**புதிய தேவாலயத்திற்கு அடிக்கல் நாட்டப்படுதல்**

காணியாளன் குடியிருப்பு புதிய தேவாலயத்திற்கு அருள்திரு. J. பால்ராஜ் ஐயரவர்கள் மற்றும் அருள்திரு. J. P. M. வசந்தகுமார் ஐயரவர்கள் ஆகியோரால் சபை ஊழியர் திருமதி. லதா டென்சிங் மற்றும் திரு. காபிரியேல் ஜெபராஜன் ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

புதிய தேவாலயத்திற்கான கட்டுமானக் குழு நியமிக்கப்பட்டது. சபை மக்கள் அனைவரும் இணைந்து உற்சாகமாய் நன்கொடைகளைக் கொடுத்தார்கள். சபை ஊழியர் திருமதி லதா டென்சிங் - திரு. டென்சிங் அவர்கள் சிறப்பு முயற்சிகளை முன்னெடுத்தார்கள். திரு. காபிரியேல் ஜெபராஜன் அவர்கள் சிறப்பாக தமது பெரிய பங்களிப்பை நன்கொடை மூலம் தந்தார்கள். சபையார் அனைவரின் ஒத்துழைப்புடன் சிறப்பாகக் கட்டி முடிக்கப்பட்ட தேவாலயம் 16.05.2010 அன்று கரிசல் சேகர தலைவர் அருள்திரு. அருள் வேதநாயகம் ஐயரவர்கள் தலைமையில் சபை ஊழியர் திருமதி. லதா டென்சிங் அவர்கள் முன்னிலையில் நெல்லை பேராயர் மகாகனம். J.J. கிறிஸ்துதாஸ் அவர்களால் தூய. மிகாவேல் தேவாலயம் என்ற பெயரில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

திருச்சபை வளர்ச்சியின் தேவைகளைக் கருதி கானியாளன் குடியிருப்பு தூய மிகாவேல் தேவாலய பயன்பாட்டிற்காக 11. 08. 2014 அன்று 5 சென்ட் நிலம் வாங்கப்பட்டது.

**தற்போதைய கானியாளன் குடியிருப்பு திருச்சபை**

தற்போதைய கானியாளன் குடியிருப்பு கிராமத்தில் 60 குடும்பத்தார் வசித்து வருகிறார்கள். கானியாளன் குடியிருப்பு திருச்சபையில் 30 கிறிஸ்தவ குடும்பத்தினர் உள்ளனர். கரிசல் சேகரத்தில் இக்கிராம சபை உள்ளது. கரிசல் சேகர தலைவராக அருள்திரு. ஆரோன் துரைராஜ் ஐயரவர்கள், கானியாளன் குடியிருப்பு சபை ஊழியராக திரு. பால் தாமஸ் அவர்கள் மற்றும் இச்சபையின் சேகர கமிட்டி உறுப்பினர்கள் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர்.



# திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு

ரெமினா சுஜித்

பகுதி 2

**திருநெல்வேலி திருச்சபையின் வரலாறு - பகுதி 2**

கடந்த மாதத்தில் நமது சிறப்பு மிக்க திருநெல்வேலியின் வரலாற்று பின்னணியை பற்றி பார்த்தோம், இந்த மாதத்தில் திருநெல்வேலி பகுதியில் கிறிஸ்தவம் எவ்வாறு அறிமுகமானது மற்றும் அப்பகுதி மக்கள் எவ்வாறு கிறிஸ்தவத்தையும் கிறிஸ்துவையும் (கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்வதற்கும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கும் அதிகமான வேறுபாடுகள் உள்ளது) ஏற்றுக்கொள்ள தொடங்கினார்கள் (1534-1542) என்று காண்போம்.

**திருநெல்வேலி, மதுரை மற்றும் இராமநாடு பகுதிகளில் உள்ள ரோமன் கத்தோலிக்க மிஷன்கள்**

திருநெல்வேலியில் (Tinnevelly) கிறிஸ்தவம் பதினாறாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்பாக, மீன்பிடி தொழில் செய்யும் மக்கள் மத்தியில் முதன்முதலில் தோன்றியது. இவர்கள் பெரும்பாலும் மீன்பிடித்தல், உள்நாட்டு பகுதிகளில் கருவாடு மீன்களை விற்பனை செய்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். அந்த காலகட்டத்தில், முத்துக்குளிப்பு மூலம் அதிக லாபம் ஈட்டி வந்தனர்.

ஆனால் பல ஆண்டுகளாக, மேற்கு கடற்கரையின் முகமதியர்களின் கொள்ளையால் அவதிப்பட்டு வந்தனர். 1534ல், ஆயுதப் போராட்டம் மூண்டது, இதில் மீன்பிடி மக்கள் தோல்வியை நோக்கி செல்ல தொடங்கினர். குதிரை வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த ஒரு ஐரோப்பிய மலபாரியின் (European Malabari) ஆலோசனையின் பேரில், அவர்கள் போர்த்துகீசிய (Portuguese) அதிகாரிகளை நாடினர். அந்த காலத்தில் கொச்சி (Cochin), கோவா (Goa) மற்றும் மேற்கு கடற்கரையின் பல பகுதிகளில் போர்த்துகீசியர்கள் இருபது ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்தனர்.

இந்த மீன்பிடி கூட்டத்தை சேர்ந்த மக்கள் தாங்கள் கிறிஸ்தவர்களாக மாற தயாராக இருப்பதாகவும், அதற்கு பதிலாக போர்த்துகீசியர்கள் தங்களை பாதுகாக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். இந்த கோரிக்கையை போர்த்துகீசியர்கள் ஏற்றுக்கொண்டனர். உடனடியாக இந்த மீன்பிடி கூட்டத்தை சேர்ந்தவர்கள் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவத்திற்கு மாறினார். அதனைத் தொடர்ந்து போர்த்துகீசியர்கள் கிழக்கு கடற்கரைக்கு ஒரு படையை அனுப்பி அங்கு நடந்து வந்த பிரச்சனைகளை மாற்றியது.

சுமார் இருபதாயிரம் மீன்பிடி கூட்டத்தைச் சேர்ந்த மக்கள் ஞானஸ்நானம் பெற்றதாகவும் மற்றும் சில பிரான்சிஸ்கன் (Franciscan) பாதிரியார்கள் இந்த பயணத்துடன் சேர்ந்து ஞானஸ்நானம் பெற்றதாகவும் கூறப்படுகிறது. ஆனால் அவர்கள் கடற்கரையை விட்டு சென்றுவிட்டனர். அடுத்த சில ஆண்டுகளில் குறுகிய கால வருகைகளை மட்டுமே மேற்கொண்டனர். சில இளம் மீன்பிடி மக்கள் பாதிரியார்களாக பயிற்சி பெற கோவாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கிருந்து சிலர் அதே நோக்கத்திற்காக லிஸ்பன் (Lisbon) நகருக்கும் அனுப்பப்பட்டனர்.

**புனித பிரான்சிஸ் சேவியரின் ஊழியம் (1542-1552)**

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, மே 1542-ல் நிறுவப்பட்ட இயேசு சபையை சேர்ந்த பிரான்சிஸ் சேவியர் (Francis

Xavier), இந்தியாவில் மிஷனரியாக பணியாற்ற ஆர்வமாக இருந்தார். வாய்ப்பு கிடைத்தபோது, அவர் கோவாவில் (Goa) தரையிறங்கினார். உடனடியாக மருத்துவமனைகள், சிறைகள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கான பொது மதபோதனைகளில் ஆர்வமாக பணியாற்றத் தொடங்கினார். சில மாதங்களுக்குப் பிறகு, விகார் எபிஸ்கோபலின் ஒப்புதலுடனும், அவரது முன்முயற்சியிலும், மீன்பிடி கூட்டத்தைச் சார்ந்த கிறிஸ்தவர்களுக்கு உதவ வேண்டும் என்று முடிவு செய்தார். செப்டம்பர் மாத இறுதியில், போர்த்துகீசிய அரசாங்கத்தின் சார்பாக முத்துக்குளிப்பை மேற்பார்வையிட தூத்துக்குடி (Tuticorin) செல்லும் ஒரு அதிகாரியின் கப்பலில் பயணமானார்.

அவர் கன்னியாகுமரி (Cape Comorin) அருகே கரையிறங்கி, அங்கிருந்து கால் நடையாய் நடந்து இரண்டு, மூன்று வாரங்களில் தூத்துக்குடியை அடைந்தார். அவருக்கு இங்கு உள்ள மொழி ஒன்றும் தெரியாது, அதனால் அவரது உதவிக்காக மொழிபெயர்ப்பாளர்களாக கோவாவிலிருந்து மூன்று இந்திய பாதிரியார்கள், அல்லது பாதிரியார் படிப்பிற்கான மாணவர்கள் அவருடன் இருந்தனர் என்று சொல்லப்படுகிறது. மீன்பிடி கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றதைத் தவிர வேறு எந்த விதத்திலும், அதாவது கிறிஸ்துவை பின்பற்றி வாழ்வது என்பது என்ன? என்று அவர்கள் அறியாததைக் கண்டு அவர்கள் கிறிஸ்தவர்களாக இல்லை என்பதை அவர் உடனடியாக கண்டறிந்தார்.

அவர் உடனடியாக நம் ஆண்டவரைப் பற்றி அவர்கள் என்ன அறிந்திருக்கிறார்கள் என்று கண்டறிய முயன்று அவர்களிடம். விசுவாசத்தின் கோட்பாடுகளைப் பற்றியும், ஞானஸ்நானத்திற்குப் பிறகு அவர்கள் என்ன புதிய நம்பிக்கைகளைக் கொண்டிருந்தார்கள் என்பதைப் பற்றியும் கேட்டார், ஆனால் அம்மக்களிடம் 'நாங்கள் கிறிஸ்தவர்கள்' என்பதைத் தவிர வேறு எந்த பதிலையும் அவரால் பெற முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் கிறிஸ்து யார் என்பதை அறிந்து கிறிஸ்தவர்களாக மாறவில்லை, சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தங்களுக்கு உதவி கோரிய நிலையில் கிறிஸ்தவத்திற்கு மாறினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுக்கு கிறிஸ்தவ சட்டத்தைப் பற்றியோ, அவர்கள் எதை விசுவாசிக்க வேண்டும் என்பதைப் பற்றியோ எதுவும் தெரியாது.

எனவே அவர் தூத்துக்குடி வரை அறுபது மைல்கள் தூரம் கிராமம் கிராமமாக மெதுவாகச் சென்று, கிறிஸ்துவை பிரசங்கித்து, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நோயாளிகளை கவனித்து, அவர்களுக்காக ஜெபங்களைச் செய்தார்.

அவர் ஞானஸ்நானம் பெறாத எல்லா குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார். அவர்களில் பலர் மிகவும் சிறியவர்கள், தங்கள் வலது கையையும் இடது கையையும் கூட பிரித்தறிய முடியாதவர்கள்! சற்று வயதானவர்கள் அவரின் கடமைகளைச் செய்யவோ தூங்கவோ கூட நேரம் தரவில்லை; ஏனென்றால் அந்த நேரத்திலும் அவர்களுக்கு சில ஜெபங்களை கற்றுக்கொடுத்தார். பரலோக ராஜ்யம் இத்தகையவர்களுடையது என்பதை அவர் புரிந்துகொள்ளத் தொடங்கினார். அவர்களுக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் (சிலுவையின் அடையாளத்தில்), பின்னர் விசுவாச பிரமாணம், கர்த்தருடைய ஜெபம், மற்றும் அருள் வாழ்த்து ஆகியவற்றைக் கற்பித்தார். அவர்களில் சிலர் மிகவும் புத்திசாலிகளாக இருப்பதைக் கண்டு அவர்களுக்கு விசுவாசத்தைக் கற்பிக்க யாராவது இருந்தால், அவர்கள் இன்னும் அதிகமாக கிறிஸ்துவை அறிந்து கொண்டு முன்மாதிரியான கிறிஸ்தவர்களாக இருப்பார்கள் என்று நம்பினார்.

தூத்துக்குடி சென்றடைந்த அவர், அங்கு நான்கு மாதங்கள் தங்கி, கிறிஸ்தவ போதனையில் மிக அவசியமான விஷயங்களின் மொழிபெயர்ப்புகளைச் செய்தார். அவரது மொழி பாஸ்க் (Basque). எனவே அவர் அவர்களில் சிறப்பாகக் கற்றவர்களை ஒன்று சேர்த்து தமிழ் மொழியையும், அவரது மொழியையும் புரிந்துகொள்ளக்கூடிய மனிதர்களைத் தேடி, வேலையைத் தொடங்கினார்கள். ஜெபங்களை மொழிப்பெயர்ப்பதில் நீண்ட நாட்களை செலவிட்டார்கள். முதலில் மூன்று நபர்களில் ஒரே கடவுள் (திரித்துவம்) என்ற விசுவாசத்தின் அறிக்கையுடன் சிலுவையின் அடையாளம், பின்னர் விசுவாச அறிக்கை மற்றும் கட்டளைகள், கர்த்தருடைய ஜெபம், அருள் வாழ்த்து, பரலோக ராணியே எங்களைக் காப்பாற்றும், மற்றும் பாவ அறிக்கை. இவைகளை மொழிப்பெயர்த்தார்கள்.

அவர் '**கிறிஸ்தவம் என்றால் என்ன, பரலோகம் மற்றும் நரகம், மற்றும் யார் பரலோகத்திற்கும் நரகத்திற்கும் செல்கிறார்கள்**' என்பது பற்றிய போதனையையும் மொழிபெயர்த்தார். இந்த முதல் மொழிபெயர்ப்புகள், இயல்பாகவே, கச்சிதமற்றவையாகவும் பிழைகள் நிறைந்தவையாகவும் இருந்தன. பிரான்சிஸ் அவற்றில் சிலவற்றை அறிந்து, அவற்றைத் திருத்த முயன்றார்.

1544-ல், அவர் தனது சகாக்களில் ஒருவருக்கு எழுதினார்: 'விசுவாச அறிக்கையில், 'எனக்கு 'வேணும்' (venum) என்று உள்ளது, அதற்கு பதிலாக 'விசுவாசம்' (vichuam) என்று போடுங்கள். 'வேணும்' என்றால் 'நான் விரும்புகிறேன்!' என்று பொருள், 'விசுவாசம்' என்றால் 'நான் நம்புகிறேன்' என்று பொருள். 'நான் ஆண்டவரை விரும்புகிறேன்!' என்று சொல்லக்கூடாது, 'நான் ஆண்டவரை விசுவாசிக்கிறேன்' என்று சொல்ல வேண்டும்.' என்று குறிப்பிட்டார்.

அவரது மொழிபெயர்ப்பு சில ஆண்டுகளுக்குப் பிறகு பாதிரியார் ஹென்ரிக்யூஸ் (Fr. Henriquez) ஆல் திருத்தப்பட்டது, ஆனால் டி நொபிலியின் (de Nobili) கருத்துப்படி, தர்ம சாஸ்திரம் படித்த இந்துக்களிடையே கிறிஸ்தவம் பரவுவதற்கு இது இன்னும் ஒரு உண்மையான தடையாக இருந்தது. எனினும், இது பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதி வரை மீனவக் கரையில் பயன்பாட்டில் இருந்தது.

தனது மொழிபெயர்ப்புகளை முடித்து, அவற்றை மனப்பாடம் செய்த பிறகு, பிரான்சிஸ் அவற்றைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

'அவர் ஊர் முழுவதும் சென்று, மணி அடித்து குழந்தைகளையும் கூப்பிட முடிந்த பெரியவர்களையும் ஒன்று திரட்டி, தினமும் இருமுறை கற்பித்தார். சூரிய உதயத்திற்குச் சற்று பிறகு இரண்டு மணி நேரமும், மாலையில் இரண்டு மணி நேரமும், ஒரு மாத காலத்தில் ஜெபங்களை கற்றுக்கொள்ளும் வகையில் கற்பித்தார். குழந்தைகள் தாங்கள் கற்றுக்கொண்டதை தங்கள் பெற்றோர்களுக்கும் வீட்டில் உள்ள மற்ற அனைவருக்கும் கற்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.'

ஞாயிற்றுக்கிழமைகளில், அவர் முழு சபைக்கும் விரிவான பிரசங்க பாணியில் கற்பித்து, வாக்கியங்களை தன்னைப் பின்தொடர்ந்து திரும்பச் சொல்ல வைத்தார். அனைவரையும், குறிப்பாக ஞானஸ்நானம் பெற வேண்டியவர்களை, பொதுவான பாவ அறிக்கையையும், பின்னர் விசுவாச அறிக்கையையும் திரும்பச் சொல்ல வைத்தார். விசுவாச அறிக்கையின் ஒவ்வொரு வாக்கியத்திலும், 'இதை நீங்கள் உறுதியாக நம்புகிறீர்களா?' என்று கேட்டார். 'ஆம்.' இரட்சிக்கப்பட அவர்கள் கடைபிடிக்க வேண்டிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளை அவர்களிடம் திரும்ப திரும்ப சொன்னார்.

அவரது நாட்கள் மேலும் பல பணிகளால் நிறைந்திருந்தன; நோயாளிகளை சந்தித்தல் அல்லது அவரிடம் கொண்டு வரப்பட்ட நோயாளிகளுக்காக ஜெபம் செய்தல் மற்றும் நற்செய்திகளை வாசித்தல், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தல், இறந்தவர்களை அடக்கம் செய்தல், தனிநபர்களுக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற நற்பணிகளில் ஈடுபட்டிருந்தார். அவர் பிராமணர்களுடன் (Brahmans) விவாதங்களையும் நடத்தினார், ஆனால் அக்காலத்தில் அவர்களிடையே கல்வியறிவு பெற்றவர்கள் சிலரே இருந்தனர்.

நான்கு மாதங்களுக்குப் பிறகு, அவர் தூத்துக்குடியை விட்டு, ஏறக்குறைய ஒரு வருடம் மீன்பிடி மக்கள் வசிக்கும் கரையோரக் கிராமங்களில் சுற்றுப்பயணம் செய்தார். அதாவது, தூத்துக்குடியிலிருந்து வடக்கே அறுபது மைல்கள் தொலைவில் உள்ள இராமநாதபுரம் (Ramnad) அருகே உள்ள வேதாளை (Vedalai) முதல் கன்னியாகுமரி வரை.

ஒவ்வொரு இடத்திலும் அதே போதனை திட்டத்தைப் பின்பற்றினார். பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவத்திற்கு மாறினர், சில சந்தர்ப்பங்களில் ஒரு முழு கிராமமே ஞானஸ்நானம் பெற்றது. அவர் கடற்கரையோரம் முப்பது கிறிஸ்தவ சபைகள் இருந்ததாக எழுதினார். அவர் முக்கிய கிராமங்களில் மதபோதகர்களையும், ஒவ்வொரு கிராமத்திலும் ஜெபங்களின் பிரதிகளையும் விட்டுச் சென்றார். எழுத தெரிந்தவர்கள் மேலும் பிரதிகள் எடுக்க வேண்டும் என்றும், மக்கள் தினமும் ஜெபங்களை திரும்பச் சொல்ல வேண்டும் என்றும், ஞாயிற்றுக்கிழமைகளில் ஒன்று கூடி அவற்றை திரும்பச் சொல்ல வேண்டும் என்றும் கூறினார் அப்படியே அவர்களை பழக்குவித்தார்.

1543 டிசம்பரில், கோவாவுக்குச் சென்று, அடுத்த பிப்ரவரியில் பணிக்கு உதவியாளர்களாக கம்பெனியின் ஒரு சகோதரர், இரண்டு பாதிரியார்கள் (ஒரு ஸ்பானியர் மற்றும் ஒரு இந்தியர்), மற்றும் இரண்டு மூன்று பொதுமக்களுடன் திரும்பி வந்தார். அவர் கோவாவில் இருந்தபோது, முத்துக்குளிப்பவர்கள், போர்த்துகீசிய அரசாங்கத்திற்கு செலுத்தும் வரியை மீனவக் கரையில் உள்ள மதபோதகர்களின் பராமரிப்புக்கு ஒதுக்க ஏற்பாடு செய்ய முடிந்தது.

அவர் நவம்பர் 1544 வரை மீண்டும் கரையோரத்தில் தங்கியிருந்தார். கரையோரக் கிராமங்களில் இருந்து எழுதிய அவரது பல கடிதங்கள் இன்றும் உள்ளன. மணப்பாடு (Manappad) கிராமத்திலிருந்து சுமார் பன்னிரண்டு கடிதங்கள் எழுதியுள்ளார், அங்கு பல வாரங்கள் தங்கியிருந்தார். அலனியலை (Alanialai), வீரபாண்டியபட்டினம் (Virapandiyapatnam) (திருச்செந்தூர் அருகில்), புன்னைக்காயல் (Punnaikayal), மற்றும் தூத்துக்குடியில் இருந்தும் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் தென் திருவிதாங்கூருக்குச் (South Travancore) சென்று, மற்றொரு மீன்பிடி மக்கள் கூட்டமான 'மக்குவா' அல்லது முக்குவர்கள் (Mukkuvas) மத்தியில் பலரை கிறிஸ்தவத்திற்கு மாற்றினார். பின்னர் அவரது பணி அவரை கொச்சி (Cochin) மற்றும் கோவாவுக்கு அழைத்துச் சென்றது, பின்னர் மொலுக்காஸ் (Moluccas) தீவுகளுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் மிஷனரி பயணம் மேற்கொண்டார். பிப்ரவரி 1548 வரை மீனவக் கரையை மீண்டும் பார்க்க முடியவில்லை.

இதற்குள் கம்பெனியின் மிஷனரிகள் அதிகமாக இந்தியாவை வந்தடைந்தனர். பாதிரியார் அன்டோனியோ கிரிமினேல் (Fr. Antonio Criminale) மற்றும் பாதிரியார் ஹென்றி ஹென்ரிக்யூஸ் (Fr. Henri Henriquez) உட்பட நான்கு பேர் மீனவக் கரையில் பணியாற்றினர். கரையோரப் பணி இப்போது மூன்று மாவட்டங்களாக முறையாக ஒழுங்கமைக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்தின் பொறுப்பில் உள்ள பாதிரியாரின் கீழ் ஒன்று அல்லது இரண்டு இந்திய பாதிரியார்களும் சில மதபோதகர்களும் இருந்தனர். குழந்தைகளுக்கு தினமும் போதனை நடத்தப்பட்டது - காலையில் பெண்களுக்கும் மாலையில் ஆண்களுக்கும், வாரந்தோறும் பெரியவர்களுக்கும் - சனிக்கிழமைகளில் பெண்களுக்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆண்களுக்கும் போதனைகள் வழங்கப்பட்டு வந்தன.

புனித பிரான்சிஸ் மிஷனரிகளை அவர்களுடன் பணிபுரியும் நான்கு இந்திய பாதிரியார்களுடன் மணப்பாட்டில் பத்து நாள் மாநாடு ஒன்றை தியானத்திற்காக ஏற்படுத்தினார். அந்த மாநாடு முடிந்து புறப்படும்போது பாதிரியார் கிரிமினேலை மிஷனின் மேலதிகாரியாக நியமித்து, பணியின் நடத்தைக்கான பொது வழிமுறைகளையும் சில அறிவுரைகளையும் வழங்கினார். முக்கியமாக, மிஷனரிகள் உறுதியாகவும், தேவைப்படும்போது கடுமையாகவும் இருக்க வேண்டும் என்றாலும், தன்னை மற்றவர்கள் நேசிக்கச் செய்து கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மீண்டும் ஒருமுறை, **'அன்பான வார்த்தைகளாலும் அன்பான செயல்களாலும் உங்களை நேசிக்கச் செய்துகொள்ளுங்கள்'** என்று அவர் தனது வழிகாட்டுதல்களை முடித்தார்,.

பிரான்சிஸ் அதே ஆண்டு செப்டம்பர்-அக்டோபரில் இரண்டு வாரங்கள் மீண்டும் கரையோரத்தை பார்வையிட்டார். இதற்குள் பாதிரியார் ஹென்ரிக்யூஸ் தமிழ் மொழியில் தனது அறிவை மேம்படுத்தி ஒரு தமிழ் இலக்கணம் மற்றும் அகராதியை தயாரித்திருந்தார்.

இந்த கட்டத்தில் திருநெல்வேலியுடனான பிரான்சிஸ் சேவியரின் நேரடி தொடர்பு முடிவடைகிறது. எனினும், அவர் இக்னேஷியஸால் (St. Ignatius) இயேசு சபையின் இந்திய மாகாண தலைவராக நியமிக்கப்பட்டார். 1552-ல் குறுகிய காலம் அந்த பதவியில் பணியாற்றினார். ஏப்ரல் 1549 முதல் ஜனவரி 1552 வரை மலாக்கா (Malacca) மற்றும் ஜப்பான் (Japan) பயணத்திற்கு இடையே கோவா மற்றும் கொச்சியில் சில மாதங்கள் செலவழித்தார். பின்னர் மலாக்கா, சிங்கப்பூர் (Singapore) மற்றும் சீனாவுக்கு (China) தனது இறுதிப் பயணத்தை மேற்கொண்டார். நாற்பத்தாறு வயதில், 1552 டிசம்பரில் மகாவோ (Macao) அருகே சாங்-ச்வென் (Chang-chwen) என்ற சிறிய தீவில், ஒரு இளம் சீன மிஷனெரி மட்டுமே துணையாக இருக்க இறைவனடி சேர்ந்தார்.

திருநெல்வேலியில் (Tinnevelly) அவரது சமகாலத்தவர்கள் அவரை அன்பான பாதிரியராக பார்த்தார்கள். அவர்களின் சரீர மற்றும் ஆன்மீக நலனுக்காக அவர் இடைவிடாது உழைத்த பகல்களையும், ஜெபத்தில் கழித்த இரவுகளையும் அவர்கள் கண்டிருந்தார்கள். அவர்களை வியப்பில் ஆழ்த்திய அவரது சுய மறுப்பையும், இளையோர் முதியோர் அனைவரையும் கவர்ந்த அவரது அன்பையும் அவர்கள் கண்டிருந்தார்கள்.

அவரைப் பற்றிய அவர்களின் மதிப்பீடுகளில், நூறு ஆண்டுகளுக்குப் பிறகு மீன்பிடி ரோம கிறிஸ்தவர்களை புராட்டஸ்டன்ட் கிறிஸ்தவத்திற்கு மாற்ற முயன்று தோல்வியுற்ற டச்சு குருவானவர் பிலிப் பால்டியஸ் (Philip Baldaeus) கூறியதை மட்டும் இங்கு மேற்கோள் காட்டுகிறோம்:

'அவர் அரிதாகவே காணக்கிடைக்கும் தூய மனம் மற்றும் விவரிக்க முடியாத ஆர்வம் கொண்ட ஒரு பாதிரியார். அவரது பாதை நம் பாதையாக இருந்திருந்தால், நாம் நிச்சயமாக அவரை இரண்டாம் பவுல் (Paul) என கௌரவித்திருப்போம். அவரது ஆர்வம், விடாமுயற்சி, பக்தி மற்றும் பிற நற்குணங்கள், விசுவாசிகள் கர்த்தரின் பணியில் அலட்சியமாக இருக்கக்கூடாது என்று தூண்டுகிறது. ஜேசுயிட்டுகளின் (Jesuits) வீரச்செயல்கள் பிரான்சிஸ்கன்களை (Franciscans) அவர்களின் கனவு நிலையிலிருந்து எழுப்பி, ரோமின் (Rome) தளர்ந்த அரியணையை தாங்கியிருக்காவிட்டால், ரோமன் திருச்சபை வெகு காலத்திற்கு முன்பே இடிந்து விழுந்திருக்கும் என்பதை நம்மில் யார் அறியாதவர்? கிறிஸ்துவின் காரியத்தை முன்னேற்றுவதில் சேவியரின் (Xavier) திறமைகளையும் வரங்களையும் என் சிந்தனையால் கூட புரிந்து கொள்ள முடியவில்லை; என் பலவீனமான பேனாவால் அவற்றை வெளிப்படுத்துவது மிகவும் கடினம். சிறிய மற்றும் பெரிய பாத்திரங்களில் சுவிசேஷத்தின் புனித பனித்துளிகளை சொட்டு சொட்டாக ஊற்றிய அவரது களைப்பறியா உழைப்பையோ, அல்லது எதிர்ப்புகளில் அவர் காட்டிய அசையாத பொறுமையையோ நான் நினைக்கும்போது, பவுலுடன் சேர்ந்து, **'இவைகளுக்கு யார் தகுதியானவர்?!'** என்று மட்டுமே கூற முடியும்.


### கடற்கரை மிஷனின் வளர்ச்சி (1552-1600)

பிரான்சிஸ் மீன்பிடி கடற்கரைக்கு கடைசியாக வருகை தந்த நாளிலிருந்து அவரது இறப்பு வரை நான்கு ஆண்டுகளில், அங்குள்ள பணிகள் தொடர்ந்து வளர்ச்சி பெற்றன. குறிப்பாக பாதிரியார் என்ரிக்குவெஸ் (Fr. Henriquez) தலைமையில் இப்பணிகள் சிறப்பாக நடைபெற்றன. மதுரை நாயக்கர் இளவரசரின் படையினரால் 1549 ஜூன் மாதம் வேதாளையில் (Védalai) பாதிரியார் கிரிமினேல் (Fr. Criminale) கொல்லப்பட்ட பிறகு, என்ரிக்குவெஸ் மிஷனின் தலைவரானார். அவர் புன்னைக்காயலில் (Punnaikayal) ஒரு கல்விக் கூடத்தை நிறுவினார். இங்கிருந்து சிறந்த மாணவர்கள் குயிலோன் (Quilon) கல்விக் கூடத்திற்கு அனுப்பப்பட்டனர். இந்தியர்களுக்கும் போர்த்துகீசியர்களுக்கும் தனித்தனி மருத்துவமனைகளையும், பல கிராமங்களில் சிறு தேவாலயங்களையும் கட்டினார். முதல் முறையாக 1582ல் தூத்துக்குடியில் (Tuticorin) ஒரு முறையான தேவாலயம் கட்டப்பட்டது. அவர் பக்திமிக்க மற்றும் கல்வியறிவு பெற்ற கிறிஸ்தவர்களை உதவியாளர்களாக நியமித்தார். இவர்கள் பாதிரியார்களை மேற்பார்வையிட்டு, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, பிற வழிகளிலும் உதவினர். தமிழ் மொழியில் உண்மையான அறிவைப் பெற்ற முதல் மிஷனரி என்ற பெருமையும் அவருக்கு உண்டு. இதன்மூலம் ஜேசுயிட் மிஷனரிகள் பின்பற்ற வேண்டிய தாய்மொழி அறிவின் தரத்தை நிர்ணயித்தார்.

பாதிரியார் என்ரிக்குவெஸ் 1600ல் இறக்கும் வரை மீன்பிடி கடற்கரை மிஷனின் தலைவராக இருந்தார். அப்போது பதினேழு பாதிரியார்கள் மிஷனில் பணியாற்றினர். இவர்களில் ஒருவர் மதுரையிலும் (Madura), மற்றொருவர் திருநெல்வேலி (Tinnevelly) பகுதியிலும் பணியாற்றினர். கடற்கரையில் உள்ள மிஷன் நிலையங்கள் தலைமையகமான தூத்துக்குடி (Tuticorin), மன்னார் தீவு (Mannar Island), வேம்பார் (Vémbar), புன்னைக்காயல் (Punnaikayal), வீரபாண்டியபட்டினம் (Virapandiyapatnam), மனப்பாடு (Minappád), மற்றும் பெரியபட்டினம் (Periyapatnam) ஆகியவை ஆகும்.

இந்தப் புள்ளியிலிருந்தே கிறிஸ்தவம் திருநெல்வேலி மண்ணில் வேரூன்ற தொடங்கியது. திருநெல்வேலி பகுதியில் பெரும் பங்காற்றிய ரோமன் கத்தோலிக்க மதுரை மிஷனைப் பற்றியும், திருநெல்வேலியில் ரோமன் கத்தோலிக்கம் எவ்வாறு படர ஆரம்பித்தது? அது எப்படி சீர்த்திருத்த திருச்சபைகள் தோன்ற அடித்தளமிட்டது என்பதை இனிவரும் தொடர்களில் காண்போம்.

**தொடர்ந்து பயணிப்போம்...**



# ஆபிரகாம் 'பண்டித'ரான வரலாறு


ந. சூரிய மூர்த்தி,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மொழித் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம் - 05




1855 ஆம் ஆண்டு புபோனிக் பிளேக் (கட்டிக்காய்ச்சல்) கொள்ளை நோயின் மூன்றாம் அலை சீனாவின் யுனான் நகரில் தொடங்கியது. "கருப்பு மரணம்" (Black Death) என்றழைக்கப்பட்ட இந்நோய் மக்களின் உயிர்களைக் காவு வாங்கியபடி சீனாவின் பிற மாகாணங்களிலும் வேகமாக பரவியது. சீனாவில் மட்டுமின்றி அங்கிருந்து கடற்பயணம் மேற்கொண்டவர்களின் வழியாக 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இந்தியாவிற்குள்ளும் ஊடுருவியது. தொடக்கத்தில் பாம்பாய், கல்கத்தா முதலான இந்தியப் பெருநகரங்கள் இந்நோய்க்கு இரையாயின. பின்னர் பெங்களூரும் இந்நோய்க்கு இலக்கானது. நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கென ஒரு ஊரையே ஒதுக்கி, தனிமுகாம்கள் அமைக்கும் அளவிற்குப் பெங்களூரில் நோயின் தீவிரம் அதிகரித்தது. சீனத்தைக் காட்டிலும் அதிகமான உயிரிழப்புகளை இந்தியா சந்தித்தது. கிட்டத்தட்ட 10 இலட்சம் இந்திய மக்களின் இறப்பிற்கு வழிவகுத்தது இக்கொள்ளை நோய்.

நாட்டின் பிரஜைகள் கொத்துக்கொத்தாகச் செத்து மடிவதைக் கண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் ஒருபக்கம் ஆங்கில மருத்துவத்தின்வழித் தடுப்பூசிகளைச் செலுத்தி உதவிகளைச் செய்யத் தொடங்கியது. நோய்ப்பரவலைத் தடுக்க பாதிக்கப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தியது. மேலும் பிரிட்டிஷ் காலனிய அரசாங்கம் இந்நோய் பரவும் விதம், நோயின் அறிகுறி, வெடிப்புகளின் தோற்றம், குணப்படுத்தும் வழிமுறைகள், தடுப்பூசியினால் ஏற்படும் விளைவு முதலானவை குறித்த ஐயங்களைக் களைந்து கொள்வதற்கு 1898ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் "Indian Plague Commission" என்னும் தனி ஆணையத்தை அமைத்துக் கண்காணித்து வந்தது.

இந்நிலையில் இந்நோய் தமிழகத்திலும் தலைகாட்டத் தொடங்கியது. கோயம்புத்தூர், தேனி, ஈரோடு, சேலம் முதலான பகுதிகளில் பிளேக்நோய் பரவியது. '1898ம் ஆண்டில் இந்தியாவின் மலைவாசஸ்தலங்களிலும் மலையடிவாரமுள்ள நகரங்களிலும் குறிப்பாகக் கோயமுத்தூர், மைசூர் பகுதிகளிலும் பிளேக் என்னும் தொத்துநோய் பரவியது' என்கிறார் தனபாண்டியன். புதிதாகப் பரவிய இந்நோய் பற்றிய அறிதல் துளியும் இல்லாத (இன்னும் சொல்வதானால் தமிழில் பெயர்கூட கண்டறியாத) தமிழக மக்களைக் கணக்கு வழக்கின்றி வாரிக்கொண்டது. 'பிளேக்' என்னும் விஷசுரம் அவர்களை அஞ்சி விதிர்க்கச் செய்தது. இன்னும் ஒருபடி கூடுதலாக **"நினைப்போர் மனத்தையும் நிகழ்த்துவோர் நாவையும் சுடத்தக்கதான மகாபயங்கரமாகிய கூற்றினுங்கொடுமை மிகுந்த"** நோயாக நினைக்கவும் அதன் பெயரைச் சொல்லவும்கூட மக்கள் பயந்தனர். நோயின் தன்மை, அறிகுறி, அதனால் பாதிக்கப்பட்டோர், உயிரிழந்தோர், அதற்கான மருந்துகள் முதலானவற்றை நேரடியாகச் சந்தித்தும் பிறரால் கேட்டுத் தெரிந்தும் பதிவுசெய்யும் எழுத்து வேலைகளும் தமிழிலக்கியக் களத்தில் நடைபெறத் தொடங்கியது. "பிளேக்" நோய் பற்றிய நாட்டார் பாடல்கள் பாங்கிலான சிந்துகள் உருவாயின. அம்மையினால் உடம்பில் ஏற்படும் கட்டிகளைப் போன்றே "பிளேக்"கின் இயல்பும் இருந்ததினால் இதனை அம்மை என்றே கருதினர். 1899ஆம் ஆண்டு "பிளேக் அம்மை பூர்வரூபம்" என்னும் நூல் திருவானைக்கா மாஜி - டிப்டிசர்ஜன் ஜெனரலாபீஸ் ரயிட்டர் ஜே.என். வேணுகோபால் நாயுடுவால் திரட்டப்பட்டது. அந்நூலுள் அகத்தியர், தேரையர் ஆகிய

சித்தர்களின் நூல்களிலிருந்து சித்த மருத்துவப் பாடல்களைக் கொடுத்திருந்தார். அப்பாடல்கள் "பனைமுகரி, மொழுக்கம்மை" என்னும் இரண்டு அம்மை நோய்களுக்கான பாடல்களாய் அமைந்திருப்பதே "பிளேக்"கையும் அம்மையின் வகையாகக் கருதியதைக் காட்டுகின்றன. இவ்வகை அம்மைகளையே "பிளேக்" நோய் ஒத்திருக்கிறதென்று அவற்றைக் குறித்த பாடல்களே நூலுள் தொகுக்கப்பட்டன.

நாளுக்குநாள் உயிரிழப்பை அதிகரித்து இந்திய மக்களையும் பிரிட்டிஷ் அரசாங்கத்தையும் அச்சுறுத்திக் கொண்டிருந்தது பிளேக். அரசாங்கம் தமது ஆங்கில மருந்துகளின்வழி கண்டறிந்த தடுப்பூசியால் வேலையைத் துரிதப்படுத்தியது. இருப்பினும் தமிழகப் பரப்பில் ஆங்கில மருத்துவத்தின் மீதிருந்த பயமும் ஊசியைச் செலுத்திக் கொள்வதில் இருந்த தயக்கமும் உயிரிழப்பை அதிகரித்தன. ஏககாலத்தில் தஞ்சையில் ஆபிரகாம் பண்டிதர் அந்நோய்க்கான சித்த மருந்துகளைக் கண்டறிந்தது தமிழக மக்களுக்குச் சமய சஞ்சீவியானது.

திண்டுக்கல்லில் 1874-76 ஆம் ஆண்டுகளில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் படித்த பின்னர் அங்கேயே பணிபுரியும்படி பள்ளித் தலைவரான யார்க் (Rev. York) அடிகளார் கேட்டுக்கொள்ள 1876ஆம் ஆண்டின் முற்பகுதியில் அங்குப் பணியாற்றினார். திண்டுக்கல்லின் வசிப்பும், அவரிடம் பயின்ற துரைசாமி, மாணிக்கவாசகம் என்ற மாணவர்களின் தந்தையான யானைமலைப்பட்டியைச் சேர்ந்த பொன்னம்பலனாருடனான (இவர் சித்த மருத்துவர்) சந்திப்புமே ஆசிரியராக இருந்த ஆபிரகாமைப் பண்டிதராக்கியது. திண்டுக்கல்லிற்கும் பழனிக்கும் இடையே நடைபயணம் மேற்கொள்ளும் சாதுக்களின் வாயிலாகச் சில கை வைத்திய மருந்துகளை அறிந்து வைத்திருந்த ஆபிரகாமின் வேட்கைக்கு உரமிட்டார் பொன்னம்பலனார். 1877ஆம் ஆண்டு கோடை விடுமுறையில் பொன்னம்பலனார் தன் ஊரான யானைமலைப்பட்டிக்கு ஆபிரகாமை வரவழைத்து மட்டுமின்றி, கருணானந்த சித்தரைப் பற்றியும் கூறினார். சுருளி மலையில் தங்கியிருந்த சித்தரைப் பலமுறை கண்டு அவரிடமிருந்து மருந்து குறித்த உபதேசங்களைப் பெற்றுக் கொண்டார் ஆபிரகாம். கோடை விடுமுறை முடிந்து திண்டுக்கல்லிற்கு மீண்ட பிறகு 'கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள்' எனத் தாம் தயாரித்த மருந்துகளுக்குப் பெயருமிட்டு அப்போதே பண்டுவமும் பார்க்கத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது 18.

அதன்பின்னர் 1882இல் திருமணம் முடிந்து 1883இல் தஞ்சை வந்தடைந்து அங்கும் ஆசிரியப் பணியுடன் பண்டுவத் தொழிலையும் செய்தார். "லேடி நேப்பியர் பள்ளி"யில் வேலைக்கு ஏற்பாடு செய்த W.H. பிளேக் என்பவர் 1890இல் மேல்நாடு சென்றுவிட அவ்வாண்டின் கோடை விடுமுறையில் ஆசிரியப் பணியை விடுத்து முழுநேரப் பண்டிதராக உருவெடுத்தார். அக்காலகட்டம்தான் இந்தியாவிற்குள் "பிளேக்" நோய் நுழையத் தொடங்கியிருந்த காலமும் ஆகும். அந்நோய்க்கு ஆபிரகாம் பண்டிதர் தயாரித்த "கருணானந்தர் செந்தூர சஞ்சீவி மாத்திரை", "கருணானந்தர் கார மாத்திரை" ஆகியன அருமருந்தாக விளங்கின. "நோயின் தீவிரத்தைக் குறைத்து அதனைக் கட்டுப்படுத்தி உடலுக்குச் சுகம் உண்டாக்கின" என்று இம்மருந்துகளின் அனுபவஸ்தர்கள் பாராட்டினர். எடுத்துக்காட்டாக, பெங்களூரிலிருந்த T. அருணாச்சலம் பிள்ளை என்பார் இம்மருந்துகள் பற்றி எழுதிய குறிப்பினைத் தனது Southern India நூலில் கொடுத்திருந்தார் Somerset Playne.

'I have much pleasure in testifiying to the efficacy of Karunanada Sanjeevi Pills and Kara mathirai (pills) in the treatment of bubonic plague cases. I have tried the above medicines in 23 cases, of which 20 proved successful. My friends call these drugs a sovereign remedy for bubonic plague.'

கடல் கடந்தும் இம்மருந்துகள் பயணப்பட்டன. இலங்கை, பர்மா, மலேசியா, சைகோன், கொழும்பு, மடகாஸ்கர் முதலான பகுதிகளிலிருந்த நோய்வாய்ப்பட்டவர்கள் மருந்துகளை வாங்கிப் பயன்படுத்தினர். '19, 20-ஆம் நூற்றாண்டுகளில் கருணானந்தர் மருந்துகள் பரவி இருந்த அளவு வேறு மருந்துகள் பரவவில்லை எனில் மிகையாகாது. மருந்துகள் சம்பந்தமாகக் கடிதப் போக்குவரத்துக்காகவே தஞ்சைத் தலைமை அஞ்சல் நிலையத்தில் ஒரு தனிப்பட்ட எழுத்தாளரை நியமித்திருந்தார்கள்' (திருமதி சா.பா. அம்புரோஸ்) எனில் இம்மருந்துகள் அடைந்த வெற்றியை உணர்ந்துகொள்ளலாம்.

ஊரையே அச்சுறுத்திய பிளேக் நோய்க்கு மருந்து கண்டறிந்தது மட்டுமின்றி உடலின் பிற அசௌகரியங்களுக்கும் மருந்து கண்டறிந்தார் ஆபிரகாம் பண்டிதர். மருந்துகளுக்கான மூலிகைகளை விளைவித்துத் தந்த கருணானந்தபுரத் தோட்டமும் அப்பணிக்கு உறுதுணையாக விளங்கியது. மேலும் மருந்தின் பெயர், விலை, உபயோக விபரம், இதனால் சுகமாகும் வியாதிகள், பத்தியம், சஞ்சீவி மாத்திரை சாப்பிடுகையில் கவனிக்கவேண்டிய முக்கிய குறிப்புகள் முதலானவற்றை மருந்து உட்கொள்ளுபவர்களுக்கு உபயோகமாகக் 'கருணானந்தர் சஞ்சீவி மருந்துகளின் உபயோக விவரமடங்கிய சஞ்சிகை' என்னும் பெயரில் அவ்வப்போது சிறுசிறு வெளியீடுகளையும் கொணர்ந்தார். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் (தனித்தனியே) அச்சான அவற்றைத் தம்மிடம் மருந்து வாங்குபவர்களுக்கு இலவசமாகவே அனுப்பிவைத்தார்.


சூரணம், லேகியம், களிம்பு, தைலம், மேற்பூச்சு எனப் பலவிதமாகப் பயன்படுத்தப்படும் மருந்துகளைத் தயாரித்தார். மனிதர்களுக்கு மட்டுமின்றி கால்நடைகளுக்கான மருந்துகளும் உண்டு. அனைத்து மருந்துகளுக்கும் கருணானந்தரின் பெயரையே முன்னொட்டாகச் சூட்டியதோடு தமது வைத்தியசாலைக்கும் கருணாநிதி வைத்தியசாலை என்றே பெயரிட்டார். இம்மருந்துகளின் வரலாறு குறித்து பண்டிதரே பின்வருமாறு கூறுகிறார்.


'இம்மருந்துகள் மதுரை ஜில்லாவில் சுருளி யெனும் மலையிலுள்ள கருணாநந்த ரிஷி என்னும் பெரியவரால் 1877-ம் ௵ எமக்குக் கிடைத்தது. இவைகளின் சிறந்த குணங்கள் அநேக வருஷங்களாய்ப் பலமுறையும் தீரப் பரீட்சித்தறிந்து அவற்றின்

பெரும் பயனை நமது சுதேசிகளில் வறியோர் பெரியோர் யாவரும் இலகுவிலடைய விரும்பி மிகவும் சொற்ப விலைக்கு வெளியிட்டிருக்கிறோம்.

இது ஒன்றிருக்க ஒன்று செய்தல், பத்தியம் பிசகில் மோசஞ் செய்தல், நம்பிக்கை யில்லாமை என்னும் முத்தோஷமு மின்றி நன்மையையே செய்யு மென்பதை உண்மையாய்ச் சொல்லுகிறோம்.'

என்று இதன் வரலாற்றைச் சொல்லித் தொடங்கி, பின் 'கருணானந்த சஞ்சீவி சொல்லும் சத்திய வாக்கு' எனும் பகுதியில் மருந்தே உபயோகிப்பவரிடம் வாக்குறுதி அளிப்பதாக, தன்விளக்க நடையில் மருந்தின் பயனை எழுதினார். 'ஜீவர்களுக்கு இன்றியமையாத உயிர்த்துணை நானென்பதை அனுபவத்தால் என் அருமைதெரிந்த உன்பந்து மித்திரர்களைக் கேட்பையாகில் சவிஸ்தாரமாய் விளம்புவர்' முதலான பல சத்திய வாக்குகளோடு கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள் வலம்வரத் தொடங்கின.




ஆபிரகாம் பண்டிதர் தயாரித்த கருணானந்த சஞ்சீவி மருந்துகள் தமிழக மக்களிடத்தில் பெரும் நம்பிக்கையைச் சம்பாதித்திருந்தது. அந்தப் புகழின் நிழலில் வணிக லாபம் ஈட்ட விழைந்த பிற சித்த மருத்துவர்கள், மருந்து விற்பனையாளர்கள் அதே பெயரிலேயே மருந்துகளை வியாபாரம் செய்ததும் உண்டு. இதனை அறிந்த பண்டிதர் தனது நுகர்வர்களுக்கு இரண்டு விதமாக நன்மையைச் செய்ய முயன்றார். ஒன்று, பண்டிதர் தாம் வெளியிட்ட வெளியீடுகளின் பின்னட்டையில் விற்பனை முகாந்திரர்களின் பெயரையோ, நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரியையோ கொடுத்தது. மற்றொன்று, மருந்துகள் ஒவ்வொன்றிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட வியாபார அடையாளமாகிய (Trade Mark) கருணானந்தரின் படம் இருக்கும் என்னும் அறிவிப்பையும் கொடுத்தது. இப்படி இருவகையில் மக்களுக்குத் தம் மருந்துகளின் நம்பகத்தன்மையை அறியச் செய்தார்.

மேலும் எழுத்துப் பூர்வமாக, 'தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை, சென்னை, இலங்கை, இரங்கூன் என்னும் முக்கியமான இடங்களிலும், இன்னும் சில இடங்களிலும் மருந்து வியாபாரஞ் செய்யுஞ் சில வைத்தியர்கள் தாங்களே செய்துகொள்ளும் மருந்துகளை 'இவைகள் கருணானந்த சஞ்சீவி மருந்துகள்தான்' என்று மக்கள் நம்பும்படி நேரில் சொல்லியும் பிரசுரித்தும் வருகிறதாக அநேகர் மூலமாகத் தெரிகிறது. கருணானந்த சஞ்சீவி மருந்துகளில் அனுபோகமுள்ள நண்பர்கள் பேதம் தெரிந்துகொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்' என எச்சரிக்கையும் செய்தார்.

பண்டிதரின் செவிக்கு வந்த செய்தி பொய்யாக இருக்கவும் வாய்ப்பில்லை என்பது போலவும் சில தரவுகள் கிடைக்கின்றன. 1912ஆம் ஆண்டில் பறங்கிப்பேட்டையிலிருந்து மாற்றலாகி, தஞ்சையின் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்கோவில் சந்நிதிக்கு வந்தது "பி. சுப்பறாய் ஆயுர்வேத ஔஷதசாலை". ஔஷதசாலை தஞ்சைக்கு நகர்ந்ததைக் குறித்தும் அங்கு விற்பனை செய்யப்படும் மருந்துகள் குறித்தும் அதே ஆண்டில் கிட்டத்தட்ட 8 மாதங்கள் (பிப்ரவரி முதல் செப்டம்பர் வரை) தொடர்ச்சியாக "செந்தமிழ்" இதழில் விளம்பரம் கொடுக்கப்பட்டது. அவ்விளம்பரப் பகுதியில் ஆபிரகாம் பண்டிதர் தயாரித்த "சஞ்சீவி மாத்திரைகள் மற்றும் கோரோஜணை மாத்திரை"களும் விளம்பரப்படுத்தப்பட்டன. ஆனால் பண்டிதரின் பெயரோ கருணானந்தரின் பெயரோ குறிப்பிடப்படாமல் விளம்பரம் வெளியானது. அம்மருந்துகள் தீர்ப்பதாகச் சொல்லப்பட்ட நோய்களும் பண்டிதர் தமது மருந்துகள் குறித்து வெளியிட்ட டைரக்ஷனில் குறிப்பிடப்பட்டிருந்த நோய்களும் ஒன்றுபோலவே அமைந்துள்ளதும் இதனை உறுதி செய்கின்றது. மேலும் பண்டிதரின் கேரோஜணை மாத்திரை சீசா 1-க்கு 12 அணா விலை என்றிருக்க, பி. சுப்பறாய் ஔஷதசாலை 2 அணாவைக் குறைந்து 10 அணாவிற்கு விற்பனை செய்து பண்டிதரின் வியாபாரத்தைக் குறைக்க முயற்சித்துள்ளது. மக்களின் நம்பிக்கைக்குரிய பொருட்களை அதே பெயரில் தாங்களே தயாரித்து, அதைவிட குறைந்த விலைக்கு விற்று ஓரளவேனும் லாபம் பார்க்கும் வியாபாரத் தந்திரமே இது.

போட்டி விற்பனையாளர்களால் வியாபார நஷ்டம் ஏற்பட்டது ஒருபுறமிருக்க நுகர்வோர்களாலும் சொற்ப நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வெகு தொலைவான இடங்களிலிருந்தவர்கள் பெரும்பாலும் தபால் வழியாகவே மருந்துகளைப் பெற்றுப் பயன்படுத்தியுள்ளனர். பிற மொழியாளரும் பயனாளர்களாக இருந்தமையின் ஆங்கிலம் மற்றும் தமிழில் மட்டுமே கடித உரையாடல் இருக்க வேண்டும் என்னும் வேண்டுகோளும் வைக்கப்பட்டது. அவ்வாறிருப்பினும் தபாலில் வந்த எழுத்துகள்

சுத்தமின்றி கிருக்கு எழுத்துகளாக இருந்தமையால் முகவரி மாறியும், மருந்துகள், அவற்றின் அளவுகள் மாறியும் அனுப்பப்பட்டதால் ஓரளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஒரு கட்டத்தில் பண்டிதர் 'அக்ஷரசுத்தியில்லாத கிருக்கு எழுத்துள்ள கடிதங்களுக்கு பதிலும், ஆர்டர்களுக்கு மருந்தும் அனுப்பப்படமாட்டாது' என்று நேரடியாகவே பதிலுரைத்தார். தெளிவான கையெழுத்தில் தபால் எழுதியவர்கள்கூட சில நாட்களுக்குள் வேறு முகவரிக்கு மாறிவிட்டதாலும் நஷ்டம் உண்டாகியிருக்கின்றது.

இந்தியா, பர்மா, சிலோன் முதலான இடங்களுக்கு வி.பி.பி. (Value payable post) வழியாக மருந்துகள் சென்றன. வி.பி.பி.-இல் அனுப்ப இயலாத பினாங்கு, சிங்கப்பூர், மலாயா, சாரவாக், டிரான்ஸ்வால், கேப்காலெனி முதலான இடங்களிலிருந்து மருந்து வாங்குபவர்களிடம், மருந்து மற்றும் அதனைக் கட்டி அனுப்புவதற்கான (Parcel) தொகையை முன்கூட்டியே மணியார்டராகவோ, பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டராகவோ பெற்று அதன்பின்னர் அனுப்பப்பட்டுள்ளன.

அதேவேளையில் மருந்துகளால் பூரண குணமடைந்து நல்வாழ்வு பெற்றவர்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தும் மீண்டும் மருந்துகள் வேண்டுமென்றும் தொடர்ச்சியாகப் பண்டிதருக்குக் கடிதங்கள் எழுதினர். சிலர் வாழ்த்துப் பாடல்கள் பாடினர். திரிசிரிபுரம் வீமநகரைச் சேர்ந்த ஜோதிடம் வீ. ஆரியமுத்துப்பிள்ளை என்பவர் "ஆபிரகாம் பண்டிதரவர்கள் பேரிற் பஞ்சரத்தின"மே பாடிவிட்டிருந்தார். இப்படிப் பல்வகையினவாகத் தமக்கு வந்த நூற்றுக்கணக்கான கடிதங்களைப் பத்திரப்படுத்தி "அனுபவ சாக்ஷிகளாகவும் நற்சாக்ஷி பத்திரங்களாகவும்" கருதி அவற்றைத் தொகுத்து ஒரு வெளியீடாகக் கொணர்ந்தார்.

1900 முதல் 1938 வரையிலுமாக (இடைவிட்டு) 15 சஞ்சிகைகள் நம் பார்வைக்குக் கிடைக்கின்றன. 1919இல் பண்டிதர் இறந்த பின்பும் அவரது குடும்பத்தினரால் கருணானந்தர் மருந்துகள் பயன்பாட்டிலிருந்தமையையே இவ்வெளியீடுகள் நமக்குக் காட்டுகின்றன. 1912இல் லாலி அச்சுக்கூடம் நிறுவும் வரையிலான சஞ்சிகைகள் பிற அச்சகங்களில் அச்சாகியுள்ளன. 1912க்குப் பிறகிலான சஞ்சிகைகள் பண்டிதரின் 'லாலி எலக்டிரிக் அச்சக"த்தில் அச்சாகியுள்ளதும் இவண் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பற்பல இன்ப துன்பங்களுக்கிடையில்தான் ஆபிரகாம் பண்டிதரானார். சில வகைகளில் நஷ்டம் ஏற்படினும் உளந்தளராது உழைத்து, பண்டுவத் தொழிலில் நிமிர்ந்து நின்றார். இதிலிருந்து கிடைத்த வருவாயே பண்டிதரைச் செல்வந்தராக்கியது. அவரது இசை முதலான பிற துறை ஆய்வுகளுக்கும் பங்களிப்புகளுக்கும் இப்பண்டுவத் தொழிலே வித்திட்டதெனில் மிகையாகாது. இங்ஙனம் தமிழகத்திலிருந்து கடல் கடந்த தூர தேசங்கள் வரை பலரது நன்மதிப்புகளைப் பெற்று சித்த மருத்துவத் துறையில் மாபெரும் வல்லாளராக வலம் வந்ததாலேயே அவருக்கு ஆபிரகாம் பண்டிதர் என்னும் பெயர் காலத்தால் நிலைத்துவிட்டது.


கிறிஸ்தவ
# வரலாற்றுச் சுவடுகள்

**மாத ஆய்விதழ் சந்தா விபரம்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| தனிப்பிரதி | ₹ 60 + நன்கொடை |
| ஆண்டு சந்தா | ₹ 600 + நன்கொடை |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 3000 + நன்கொடை |

**வங்கி விபரம்**

Name: CHRISTAVA VARALATRU SUVADUGAL

A/c Number : 1748 020000 5614

Bank name : Federal Bank

IFSC code: FDRL0001748

"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
மாத ஆய்விதழை நீங்கள்
தொடர்ந்து பெற்றுக் கொள்ள
G-Pay மூலம் நன்கொடை செலுத்த
91767 80001 என்ற எண்ணுக்கு செலுத்தவும்
காசோலை மற்றும் வரைவோலை செலுத்த
"கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்"
( CHRISTAVA VARALATRU SUVADUGAL )
என்ற பெயரில் எடுக்கவும்



**ஆசிரியர்**

**கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள்,**
**கதவு எண் 2-2-3(4), வடக்குத்தெரு,**
**பங்களாச் சுரண்டை-627859,**
**தென்காசி மாவட்டம் (தமிழ்நாடு)**
**04633 290401, 91767 80001**

christianhistoricalsociety.in
christianhistorical@gmail.com



# தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்

## 250 — வது பிறந்த நாள் விழா உரை

**தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் 250 - வது பிறந்த நாள் விழா உரை (07.09.1774 - 24.01.1864):-**

சங்கை. நோவா சாஸ்திரியார், தஞ்சாவூர். நாள்: 06.09.2024. இடம்: தூய பேதுரு ஆலய வளாகம், தஞ்சாவூர்.

**'முன்துணை நேர் நடுவின் துணை கால முகிவின் துணை
பின் துணை பற்பல போதும் துணை பெரும் பாவி எனக்கு
இன்றும் அன்றன்றும் என்றென்றும் துணை இனிமேல் என் உயிர்
பொன்றும் பொழுதும் துணை யேசு நாயகன் பொற்பதமே'.**

ஞான அந்தாதி, கலித்துறை, 101.

**பராபரனின் துணை கொண்டு இவ்வுரை தொடங்குகிறேன்.**

உன் மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இது முதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும், நீங்குவதில்லை யென்று கர்த்தர் சொல்லுகிறார்; இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசாயா 59: 21.

பராபரன் வேதநாயகம் சாஸ்திரியாரை அவரது சிறு வயதில் தெரிந்தெடுத்து முதுமையின் காலம் மட்டும் அவருடைய மகிமைக்கென வல்லமையான பாத்திரமாக பயன்படுத்தினார். மாத்திரம் அல்லாது அவருடைய 6 ஆம், 7 ஆம் தலைமுறைகளாக இன்றளவும் பயன்படுத்தி வருகிறார். அவருடைய உடன்படிக்கை அவர் சந்ததிதோறும் உள்ளது என்பதை இந்த வசனத்தின் வழியாக உறுதிப்படுத்தியுள்ளார். இந்த விழாவிற்காக தெரிந்துக்கொள்ளப்பட்ட கருப்பொருள் 'ஒரு சந்ததி அவரைச் சேவிக்கும்; தலைமுறை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்'. சங்கீதம் 22: 30.

**சாஸ்திரியார் படைப்பின் நோக்கம்:**

சாஸ்திரியார் அவர்கள் ஏறத்தாழ 130 நூற்களை கவிகளாகவும், கீர்த்தனைகளாகவும், இலக்கியங்களாகவும், உரைநடைகளாகவும் இயற்றியுள்ளார். அவற்றுள் மூன்றில் ஒருபங்குக்கும் குறைவாகவே கிடைக்கப்பெற்றுள்ளது. பல புத்தகங்கள் அச்சடிக்கப்படாமலே போனதும் உண்டு.

கடவுளை அல்லாமல் வேறொன்றையும் பாடமாட்டேன் என்பதில் உறுதியாக இருந்தார் சாஸ்திரியார். அவருடைய படைப்பாகிய சாஸ்திரக்கும்மி என்ற நூலில் இந்நூற் சொன்னோன் சிறப்பு என்ற தலைப்பில் கீழ்வருமாறு பாடுகிறார்,

**'பராபரனல்லாத பாட்டறியான் எம்
பராபரனையன்றிப் பாட்டுரையான்
பராபரன் றன்னையே கொண்டாடி நிதம்
பாட்டுப் பாடுவான் ஞானப் பெண்ணே' (433)
'யேசுவை மாத்திரம் பாடிக் கொள்வான் அவர்க்கு
இஷ்டமதாக மன்றாடிக் கொள்வான்
யேசுவை யல்லாமல் ஒன்றையுஞ் சொல்லான்
எங்கள் கவிராயன் ஞானப் பெண்ணே' (434)**

**படைப்பின் ஆரம்பம்:**

தந்தை கிறிஸ்டியன் ஃபிரடரிக் ஸ்வார்ட்ஸ் ஐயரால் தஞ்சைக்கு அழைத்துவரப்பட்ட சாஸ்திரியாருக்கு முதன்முதலாக சங்கீத புத்தகத்தை ஐயர் அவர்கள் கொடுத்ததை நினைவுகூர்ந்து,

**'சங்கீதத்தை முதற் கொடுத்தான் வேத
சாஸ்திரத்தையும் தான் கொடுத்தான்
சங்கீதத்திலும் சாஸ்திரத்திலும்
சமர்த்தனாக்கினான் ஞானப் பெண்ணே'**

- சாஸ்திரக்கும்மி, இந்நூற் சொன்னோன் காட்டிய நியாயம், 766.

பள்ளிக்கூட ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய சாஸ்திரியார் மாணாக்கருக்குப் பாடங்களை பாடல் வழி நடத்தலானார். அதற்காக பல படைப்புகளை உருவாக்கினார்.

**'சாஸ்திரியால் அல்லோ பள்ளிக் கூடங்களும்
சபையும் கோவிலும் தான் சிறந்து
சாஸ்திரியாலே உன் மைந்தர்கள் எல்லாம்
சமர்த்தர் ஆயினார் ஞானப் பெண்ணே'**

-- சாஸ்திரக்கும்மி, 769.

இப்படி பள்ளி மாணவருக்காக உருவாக்கப்பட்ட நூல்கள்: 1. அகரவரிப் பொத்தகம், 2. ஆதியானந்தம், அறிவானந்தம், 3. (அ) முன்னுரை, (ஆ) மெய்யறிவு, (இ) ஞான வழி, 4. பராபரன் மாலை, 5. நூறு சுலோகம் போன்றவை. இதில் ஆதியானந்தம் - அறிவானந்தம் என்ற நூல் ஔவையாரின் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் போன்ற வகையில் அமைத்திருப்பார். கிறிஸ்தவ பள்ளிகளில் இத்தகைய நூல்கள் இருப்பது அவசியம் என சாஸ்திரியார் இந்நூல் முகவுரையில்

குறிப்பிடுகிறார். இந்நூல் படைக்கப்பட்ட வருடம் கி.பி. 1800.

**'அகமற்றருள் செய்**
**ஆண்ட பொருளறி**
**இனமறிந்து சேர்**
**ஈவது அருஞ்செயல்**
**உத்து சொல்லோது**
**ஊமை போலிரு**
**எண்ணம் இகழேல்**
**ஏழைக்கு இடரேன்**
**ஐயமும் பாவம்**
**ஒழுங்கற்று ஒழுகேன்**
**ஓது நூற் செய்**

ஔவை சொல்லமுதம்' (÷ உத்து சொல்லோது - சான்றுடன் பேசு) இதனைத் தொடர்ந்து சபைகளுக்கும் விரிவுபடுத்தி கீர்த்தனைகளையும் இலக்கியங்களையும் உரைநடை நூல்களையும் படைத்தளித்தார்.

**வே. சா. படைப்பில் இறையியல்:**

சாஸ்திரியார் தம் படைப்புகளில் இறையியலுக்கு முதன்மையான இடத்தை கொடுத்தார். இலக்கிய நயத்தையும் இசையையும் பின்வைத்தார். ஜெபமாலை என்ற நூலைப் படைத்த சாஸ்திரியார் சுமார் 45 ஆண்டுகள் அதாவது க.பி. 1810 முதல் 1855 வரை செலவிட்டு முழு நூலாக செப்பனிட்டு உருவாக்கினார். அவருடைய படைப்புகளில் நீண்ட கால படைப்பாக இந்த ஜெபமாலை புத்தகம் அமைந்துள்ளது.

**சிலுவை காட்சி:**

1783 ஆம் வருடத்தில் தன் சிறு பருவத்தில் ஒரு சிலுவை காட்சியை கண்டார். அதை தன் பாட்டியிடம் சொன்னபோது, 'அது சுவாமியினுடைய அடையாளம், ஒரு சாதாரன மனிதனுக்குக் கிடைக்கக் கூடிய தரிசனம் அன்று! ஒரு பெரிய அதிசயம் உன் காலத்திலேயே சம்பவிக்கும்' என்றார். இது சாஸ்திரியாருடைய வாழ்வில் மிகப் பெரிய திருப்புமுனையாக அமைந்தது. இந்த அனுபவத்தை ஜெபமாலை நூலில் குறிப்பிடுகிறார்.

**'காலை யான் எழுந்த போது அக்**
**கணத்தில் உன் சிலுவை ரூபம்**
**ஏல என் கண்ணின் முன்னும்**
**இருதயத்திலுந் தீட்டிக்'** ஜெபமாலை, 28: 3. என்ற தன் இறை அழைப்பின் அனுபவத்தைப் பகிர்வதைக் காணலாம்.

**திரித்துவம்:**

திரியேகத்துவம் என்பது கிறிஸ்தவத்தின் திரித்துவம் அடிநாதமாக விளங்குகிறது. திரித்துவம் என்ற சொல் திருமறையில் இடம்பெறவில்லை. என்றாலும் மூவருள் ஒன்றான பராபர வஸ்து என்ற கோட்பாடு திருமறைதோறும் விளங்கி வருகிறது. பிதா சுதன் தூயாவியார் என்ற அடிப்படை சித்தாந்தத்தில் நாம் இன்று பராபரனை வழிபடுகிறோம். அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம் இதையே கற்பிக்கிறது. இன்னும் ஆழமாக திரித்துவத்தைப் பற்றி 'அதநாஷியஸ் விசுவாசப் பிரமாணம்' வழியாக அறிந்துக்கொள்ளலாம். திரித்துவத்தைப் பற்றி அதிகமாக சாஸ்திரியார் பாடியுள்ளார்.

**'திரிதத்துவனே ஒரு தேவனே**
**செய சத்துவனே வருசீவனே'. (202)**
**'ஆதி திரித்துவமே எனை**
**ஆள் மகத்துவமே'. (198)**
**'திரியேகா திரியேகா**
**திரிலோக ரட்சகா'. (199)**

இன்னும் அவருடைய பிற இலக்கிய படைப்புக்களிலும் வெகுவாக திரித்துவத்தைப் பற்றி பாடியுள்ளார்.

**கிறிஸ்துவின் தன்மைகள்:**

பராபரனின் திருப்பெயரை பலவாறு கூறி மகிழ்வார். அவரது படைப்புகள் தோறும் பலவித பெயர்களை இறைத்தன்மையோடு ஒப்பிட்டு அழைத்ததுப் போற்றுவது அவரது மரபு. அவ்வாறு ஜெபமாலையில் கீழ்கண்டவாறு பாடுகிறார்.

**'ஆதி நாயகா நீதி நாயகா**
**அளவில்லாத மெஞ் ஞான நாயகா**
**சோதி நாயகா இயேசு நாயகா**
**சொருப நாயகா அருப் நாயகா**
**சாதி நாயகா தேவ நாயகா**
**சருவ நாயகா பொறுமை நாயகா**
**வேதநாயகா என்றெனக்கு அருள்**
**வேத நாயகா வேத நாயகா'.-** ஜெபமாலை, 13: 11.

***இதற்கெல்லாம் திருமறை ஆதார குறிப்பை தேடியபொழுது,***

**1. ஆதி நாயகா:**

ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது...... யோவான் 1: 14. மேலும் யோ.1: 1 - 14 வரை உள்ள வசனங்களை வாசிக்கவும்.

**2. நீதி நாயகா:**

நீதியை நிறைவேற்றுபவர். மத். 3: 15. நீதிமான். மத். 27: 19, 24; லூக். 23: 47. நீதி செய்கிறவர். யோ. 5: 30. நீதியுள்ளவர். அப். 3: 14.

**3. அளவில்லாத மெய் ஞான நாயகா:**

**ஞானமானவர். மத். 11: 19, 13: 54. மாற்கு 6: 2, லூக். 7: 34, 35.**
**ஞானமே ஆனவர். மத். 12: 42, லூக். 11: 31.**
**ஞானம் நிணறந்தவர். லூக். 2: 40, 52.**
**தேவ ஞானம் (இயேசு கிறிஸ்து). லூக். 11: 49.** (அப்போஸ்தலர்கள் இயேசு கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டவர்கள். ஆகையால் கிறிஸ்து தம்மை 'தேவ ஞானம்' என்று கூறி மறைமுகமாக வெளிப்படுத்துகிறார்.)

**4. சோதி நாயகா:**

(ஜோதி -ஒளி வெளிச்சம்) பிரகாசிக்கிற ஒளி. லூக். 2: 30, யோ. 1: 5. மனுஷருக்கு ஒளி - ஜீவ ஒளி. யோ. 1: 4, 8: 12. சாட்சியின் ஒளி. யோ. 1: 7. உலகத்தின் ஒளி. யோ. 8: 12, 9: 5, 12: 46. விசுவாசத்திற்குரிய ஒளி - உடன் இருக்கும் ஒளி. யோ. 12: 36. மெய்யான ஒளி. யோ. 1: 9.

**5. இயேசு நாயகா: இயேசு என்று பேரிடுவாயாக. மத். 1: 21.**

**6. சொருப் நாயகா -உருவம் - மாம்சம் (சரீரம்) - இரத்தம்.** என் மாம்சம் மெய்யான போஜனம், என் இரத்தம் மெய்யான பானம். யோ. 6: 55. அந்த வார்த்தை மாம்சமானார். யோ. 1: 14. (மேலும், அப். 2: 29 - 31. ல் தாவீதின் தீர்க்கதரிசன குறிப்பும் ஒப்புநோக்கத்தக்கது.)

**7. அருப நாயகா -அரூபம், உருவம் அற்றது (உருவமற்ற நாயகா):**

(இயேசுவின் மரணத்திற்கு முன்பு......)..இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து. தேவாலயத்தை விட்டுப்போனார். யோ. 8:

59. (இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு ...)

......அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு, அவரை அறிந்தார்கள். உடனே அவர் அவர்களுக்கு மறைந்துபோனார். லூக். 24: 31. மேலும், அப். 9: 4, 5. வாசிக்கவும்...

**8. சாதி நாயகா - யூதருக்கு இராஜா: யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே? மத். 2: 2.**

..நீ யூதருடைய ராஜாவா என்று கேட்டான். அதற்கு இயேசு: நீர் சொல்லுகிறபடிதான் என்றார். மத். 27: 11.

இயேசு முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணி, ...... மத். 27:29. இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு என்று எழுதி, அவர் சிரசுக்கு மேலாக வைத்தார்கள். மத். 27: 37.

......நான் யூதருடைய ராஜாவை உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கிறீர்களா என்று கேட்டான். மாற்கு 15: 10.

.....யூதருடைய ராஜாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். மாற்கு 15: 12.

யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரை வாழ்த்தி, மாற்கு 15: 18. .......யூதருடைய ராஜா என்று எழுதி, சிலுவையின் மேல் கட்டினார்கள். மாற்கு 15: 26.

**9. தேவ நாயகா: பிதாவின் கட்டளையை பெற்றவர். யோ. 10:18.**

பிதாவின் போதனையின்படி சொன்னவரும் செய்தவரும். யோ. 8:28 பிதாவினால் மகிமைப்படுத்தப்பட்டவர். யோ. 8: 54. பிதாவை அறிந்தவர். யோ. 8: 55. பிதாவினிடத்திற்கு அழைத்துச் செல்பவர். யோ. 14: 6. பிதாவினால் வந்தவரும் அனுப்பப்பட்டவரும். யோ. 7: 29. வானத்திலிருந்து இறங்கிய ஜீவ அப்பம். யோ. 6: 51.

**10. சருவ நாயகா -**

எல்லாவற்றுக்கும் தலைவன்: பிதாவுக்கு ஒத்ததும் ஏற்றதுமான மகிமை. யோ. 1:14 பிதாவுக்கடுத்தவைகளில் இருப்பவர். லூக். 2: 49. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. யோ. 1:3, சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே. 1 கொரி. 15: 27. குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். 1 கொரி. 15: 28.

**11. பொறுமை நாயகா: நியாயம் செய்வதில் நீடிய பொறுமை உள்ளவர். லூக். 18: 7.**

...ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டு மென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக் கிறார். 2பேதுரு 3: 9. நீடிய பொறுமையே இரட்சிப்பு. 2 பேதுரு 3: 15. தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்த போது, பேழையிலே சிலராகிய எட்டு பேர் மாத்திரம் (நோவாவின் குடும்பம்) காக்கப்பட்டார்கள். 1 பேதுரு 3: 20. எதுவரைக்கும் உங்களிடத்தில் பொறுமையாயிருப்பேன். லூக். 9: 41., மாற்கு 9: 19., மத். 17: 17. தேவ தயவின் பொறுமையை அசட்டை பண்ணுகிறாயோ. ரோமர் 2: 4.

**12. வேத நாயகா -வேதத்தின் நாயகன் -**

வேதத்தின் பொருள்: இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். யோ. 14: 6. இயேசு: உம்முடைய (பிதாவுடைய) வசனமே சத்தியம். யோ. 17: 17.

இவ்வாறு சாஸ்திரியார் சூட்டும் பெயர்கள் அனைத்திற்கும் திருமறை ஆதாரம் உண்டென்பதை அறியலாம்.

**ஓம், பகவா, பிரமா:**

**'ஓம் பகவா ஓம் நமா அல்பா ஓமேகா வா ஓகோ**
**உம்பரா கருணாம்பரா ஓலம் பதந்தாவே**
**ஆம் பிரமா ஓம் நமா அனாதி மூலமே ஓலோலம்**
**அல்லேலூயா மகத்துவம் அனந்த காலமே'**

- ஆரணாதிந்தம், பக்கம் 89, சரணம்.

இத்தகைய சொற்கள் இன்றைய கிறிஸ்தவர்களுக்கு இடறலாயிருக்கிறது என்று சொல்லுவோர் உண்டு. பிற சமயங்களில் பயன்படுத்தப்படும் அல்லது பிற அன்னிய தெய்வங்களை குறிக்க பயன்படும் சொற்களாக இதை நினைக்கின்றனர். காரணம் தமிழ் மொழி இன்று கிறிஸ்தவர்களுக்கு அன்னியமாகிப் போனதே எனலாம். ஆனால் இந்த சொற்கள் கடவுளை குறிக்கும் பொதுவான சொற்களாகவே உள்ளது என்பதை தமிழ் அகராதி வழியாக அறியலாம். ஓம் என்பது தமிழில் மூன்று எழுத்துக்களின் இணைவாக கூட்டாக கருதப்படுகிறது. அது அ+உ+ம் இணைந்து 3 மாத்திரைகள் என்ற இலக்கண மரபில் பொருந்துவதால் அது நீண்டு ஒலிக்கக் கூடிய சொல்லாக உள்ளது. (ஆதாரம்: நா. கதிரைவேற்பிள்ளையின் 'தமிழ் மொழி அகராதி' - சாரதா பதிப்பகம், பக்கம் 354, 1031,1032.) ஆகவே கீழே அந்தந்த சொல்லுக்கான பொருளை தமிழ் அகராதி வழியாக தனித்தனியாக விளக்கியுள்ளேன்.

ஓம் ஆமெனல் (ஆம் எனல்). ஓம் என்பது மும்மை தன்மை கோட்பாட்டினைக் குறிக்கிறது. முக்காலம், முச்செயல் எனவும் பொருள் வகுத்தனர். சாஸ்திரியார் 'ஓம்' என்ற சொல்லுக்கு 'இருக்கிறவராகவே இருக்கிறேன்', 'இருக்கிறேன் எனபவர்' (யாத்திராகமம் 3: 14) என்று பொருள் கூறுகிறார். மேலும், பகவான் என்பதற்கு கடவுள், அறுகுணத்தான் என்று பொருள்படும்.

**'ஆறுலட்சண சொரூபா**
**அனந்த பேரின்பா போற்றி'**

-- ஞானப் பதக் கீர்த்தனை, 112, விருத்தம் 1.

அல்பா ஒமேகா என்பது 24 கிரேக்க எழுத்துக்களின் தொடக்கமும் கடைசியுமாக உள்ளது. (வெளிப்படுத்தல் 1: 8) உம்பரான் என்றால் உயர்ந்தோன் என்றாகிறது. ஓலம் என்பதற்கு அடைக்கலம் வேண்டுகிறேன் எனப் பொருள் படும். ஆம் - இயேசுக்கிறிஸ்து ஆம் என்றே இருக்கிறார். (2 கொரிந்தியர் 1: 19) பிரமா என்றால் வேதத்துக்கு உரியவன் என்பதாகும். அனாதி என்பது ஆதியின்மை, தொடக்கம் இல்லாதவன். ஓலோலம் எனபதை ஓ! ஓலம் என்று பிரித்து பொருள் கொள்ளின் ஒலியாக இருப்பவர், வார்த்தையானவர் என்ற பொருளில் வரும். அனந்தம் என்பது முடிவு இல்லாதது. இவைகளின் வழியாக பொருள் காண்போமேயானால், 'இருக்கிறவராகவே இருக்கிற கடவுளே, முக்காலத்தும் உரியவரே, உம்மை வணங்குகிறேன். ஆதியும் அந்தமுமானவரே வாரும் ஓகோ! ஆகாய மண்டலத்திலுள்ள கருணை பரனே அடைக்கலம் வேண்டுகிறேன். உன் பாதத்தில் அமைதல் தாரும். ஆம் என்றிருக்கும் கிறிஸ்துவாகிய கடவுளே, மூவராகிய கடவுளே வணங்குகிறேன். தொடக்கமற்ற ஆதியே அடைக்கலம். மேன்மை மிகுந்த துதி, நீடித்தகாலம் உண்டாகட்டும்.

தொடரும்...



# CHS -LIBRARY RESEARCH AND DEVELOPMENT CENTRE

*"Remember the days of old; consider the years of many generations; ask your father, and he will show you, your elders, and they will tell you"*

*(Deut. 32:7 ESVA).*

*We, the People of God are exhorted to keep alive the memory of our faith history and pass it on to our sons and daughters. The Christian Historical Society endeavours to help Tamil-Christian community to fulfill this noble obligation.*

***All praise and glory be to God!***

***Shalom Greetings to you in the name of our Lord and Saviour Jesus Christ!***

*The Christian Historical Society (=CHS) is the fruit of the diligent efforts of numerous Tamil-Christian historians who in the light of Deuteronomy 32:7 seek to document as well as write the faith history of Tamil-Christian community with the active involvement of numerous young volunteers. To cover wider areas where our community has its roots, collaborations are underway with historians and like-minded individuals throughout Tamil Nadu.*

*By God's grace and with prayerful support of Friends, CHS has initiated several activities towards realising its objectives during the past five years since inception. The important ones being:*

- *Publication of the monthly magazine, Kristhava Varalaatru Suvadugal*
- *Reprinting books which contain historical accounts of Tamil-Christian community*
- *Compilation and digitalising of antiquarian texts and documents*
- *Organising Mission Tours to places of historical importance*
- *Establishment of a Library with space for Museum, Research, Seminars etc.*

*Currently, with the benevolent donation of land by a Friend, God has enabled CHS to start the building project for Library cum Research & Development Centre at Surandai. Few individuals are donating and have promised to donate portion of construction material. We need to buy remaining construction material and furnishings for the Library and Seminar Hall.*

*We cordially invite families, individuals and organisations to contribute generously to complete the momentous library building, God willing by June 2025.*

*In God's mission,*

*Manna Selvakumar*

*+91 9176780001*

BANK

**Name: Christian Historical Society**

**A/c Number : 1748 020000 4906**

**Bank name : Federal Bank**

**IFSC code: FDRL0001748**





# Yearly Subscription



# 600

christianhistoricalsociety.in

Apply Now

## Monthly Magazine for church history


Return Requested:

To

Tamil Printed Book- For Private Cirulation Only


**CHRISTAVA VARALATRU SUVADUGAL**
# 2.2.3(4)North Street,
Bungalow Surandai-627859.
Tenkasi District
Tamil Nadu
Ph: 04633 290401
Mo: **91767 80001**



Owned & Published By CHRISTIAN HISTORICAL SOCIETY, Tamil Eduction- For Private Cirulation Only
Editor|G.MUTHAIAH SELVAKUMAR| at 2.2.3(4)North Street, Bungalow Surandai-627859. Tenkasi District Ph: 04633 290401